அலகு 5

# மனையமைப்பு மற்றும் மனையலங்காரம்

3SIJP5



## கற்றலின் நோக்கங்கள்

- இந்த அத்தியாயத்தின் மூலம் மாணவர்கள் கற்றுக் கொள்வது
- வீட்டின் முக்கியத்துவத்தை விவரித்தல்
- வீடுகட்ட நிலம் தேர்ந்தெடுத்தல் மற்றும் வீடுகட்டும்போதே திட்டமிட்டு அறைகளை அதற்குரிய கொள்கையின்படி வடிவமைப்பது போன்ற தகவல்களை பெறுவது.
- வீட்டில் நமக்கும் வேலைகளுக்கு ஏற்றவாறு இடத்தை ஒதுக்குவது
- கலையின் மூலப்பொருட்கள் மற்றும் வடிவமைப்பின் நியதிகள் குறித்து புரிந்துக் கொள்ளுதல்.
- நிறம் மற்றும் நிறப்பொருத்தங்கள் பற்றி கற்றுக்கொள்ளுதல்.
- தரை அலங்காரம் பற்றி அறிந்து கொள்ளுதல்.

## 5.1 முகவுரை

மனை என்பது நமது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். வீடு நம் இதயம் லயித்திருக்கும் இடம் வீடாகும். தற்காலத்தில் வீட்டில் இடம் என்பது மிக முக்கியமாகிவிட்டதன் காரணம் இடப்பற்றாகுறையாகும். மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக, நிலத்தின் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. எனவே, இருக்கும் குறைந்த இடத்தில் பல அடுக்குமாடிகளைக் கட்டி பல குடும்பங்கள் வசிக்க வேண்டிய சூழ்நிலையுள்ளது.நாம்வீடுவாங்கும்பொழுது, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு வாங்க வேண்டும். நம் வீட்டில் இருக்கும் உபகரணங்கள், மரச்சாமான்கள், அலங்காரப் பொருட்களை சீராக அடுக்குவதும், அதற்குரிய இட ஏற்பாடுகளை செய்வது நமக்கு அதிகபட்ச இட வசதியையும் சௌகர்யத்தையும் தரும். மகிழ்ச்சியான, திருப்திகரமான வாழ்க்கைக்கு நம் வீட்டின் உள் அலங்காரமானது ஒரு நிறப்பொருத்தம், அறைகலன், அலங்காரப் பொருட்களைக் கொண்டு சிறப்புற அமைத்திருத்தல் வேண்டும்.

வீடு என்பது தரை, சுவர், ஜன்னல், மேற்கூரையால் உருவாக்கப்பட்டு, குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடி வாழ்ந்து தங்கள் வாழ்நாளில் பெரும்பகுதியை செலவிடும் இடமாகும். மனிதனுக்கு உணவு, உடைக்கு அடுத்து வீடு ஓர் அடிப்படைத் தேவையாகும். தேசிய கட்டிட அமைப்புபடி வீடு என்பது ஓர் சராசரியான குடும்பம் வசிக்கும் முழுமையான அல்லது சற்று முழுமையில்லாத அலகு ஆகும். வீட்டின் முக்கியத்துவம் குறித்து கீழ்வருமாறு காணலாம்.

### 5.1.1 வீட்டின் முக்கியத்துவம்

1. அதிகக் குளிர், வெப்பம், காற்று, மழை மற்றும் சமூக விரோதிகளிடம் இருந்து குடும்பத்தினரை காப்பாற்றுவது வீடாகும்.
2. வீடு என்ற அமைப்பானது தரை, கூரை, கதவு, சாளரங்கள் இவற்றால் ஆக்கப்பட்டுள்ளது. இங்குதான் மனிதன் வெளியுலகத்தின் பரபரப்பான வாழ்க்கையிலிருந்தும், கவலைகளிலிருந்தும் விடுபட்டு, மன அமைதிக்கும், ஓய்வுக்கும் தன்னிருப்பிடத்தை நாடுகிறான்.
3. குடும்பவாழ்க்கையின் இருப்பிடமாகிறது. இவ்வீட்டில்தான் குடும்பத்தினர் அன்பினாலும், பாசத்தினாலும் பிணைக்கப்படுகிறார்கள். மேலும் கூட்டு வாழ்க்கையை மகிழ்ந்து அனுபவிக்கின்றனர்.
4. தனிநபர் மற்றும் பொது வேலைகளான சமைத்தல், பரிமாறுதல் பொருட்களைச் சேமித்து வைத்தல், கழிவுப்பொருட்கள் வெளியேற்றுதல், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், படித்தல் மற்றும் விருந்தோம்பலுக்கு இடம் கொடுக்கும்.
5. மனிதன் தன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தவும், சுயேட்சையாகச் செயல்படவும் வீடு வசதியாக உள்ளது.
6. நல்ல வீடு, ஓய்வையும் மறைவையும் (privacy) அளிப்பதுடன் அரோக்கியமானச் சூழ்நிலையைக் குடும்பத்தினருக்கு ஏற்படுத்தி அவர்களின் ஆளுமை, அனுகுமுறை, மதிப்புகள் மற்றும் பாதுகாப்பு உணர்வை வளர்க்கின்றது.
7. குடும்பத்தின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களைப் தனிநபர், தனிநபர் வீட்டில் பெறுகிறார்.
8. உடல் சுகவீனம், வேலையின்மை, முதுமை, கைம்பெண், உடல் ஊனம் போன்ற காரணங்களில் தங்களைத் தாமே காப்பாற்றிக்கொள்ள முடியாத குடும்ப அங்கத்தினர்களுக்கு அன்பும் ஆதரவும் தருகின்ற இடமாக வீடு திகழ்கிறது.



XII Std - Home Science TM_Unit 5.indd 139 20-04-2020 2.14.53 PM

9. குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிக்கும் அம்சமாகவும், சுற்றுபுறத்தில் குடும்பத்தின் பெருமையை விளக்கும் சின்னமாகவும் வீடு விளங்குகிறது.

10. ஒரு நாட்டின் வருமானம், பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை அதிகமாவதற்கு வீடு உதவுகிறது.

## 5.1.2 குடியிருப்பு கட்டடத்தின் வகைகள்:

| தனிவீடு | பகுதியாக பிரிக்கப்பட்ட வீடு | வரிசை வீடுகள் | அடுக்குமாடி வீடுகள் | வானளாவிய அடுக்குமாடி வீடுகள் |
|---|---|---|---|---|
| இது சுற்றிலும் சொந்த நிலத்தால் கட்டப்பட்ட தனியான வீடு ஆகும். | தனிமனை, ஆனால் பொது எல்லைச் சுவற்றினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இதில் தண்ணீர் குழாய்கள், கழிவுநீர்க்குழாய்கள், மின்சாரக் கொடிகள் போன்றவற்றை பொதுவாக அனைத்து செலவினங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பொருளதாரச் சிக்கனம் செய்ய உதவுகிறது. | குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள் இத்தகைய வீடுகளைத் தேர்ந்தெடுப்பார்கள். இரண்டு அடுத்தடுத்துள்ள வீடுகளுக்கு ஒரே தடுப்புச்சுவர் இருக்கும். சமையலறை, வரவேற்பறை போன்ற அறைகள் குறைந்த இடவசதி கொண்டதாக இருக்கும். | இந்த வகை வீடுகள் மூன்றிலிருந்து ஏழு அடுக்குகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தளத்திலும் இரண்டு அல்லது நான்கு வீடுகள் இருக்கும். நிலமும் பொது வசதிகளும் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்படும். | இவை பல மாடிக்கட்டிடங்கள், நிலத்தின் விலை அதிகமாக இருப்பதால், பெரிய நகரங்களில் இவை பொதுவாகக் காணப்படும். |

## 5.1.3 வீடுகள் தேர்தெடுப்பதைப் பாதிக்கும் காரணிகள்

வீடுகளைத் தேர்ந்தெடுக்கும் போது கீழ்கண்ட குறிப்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

- **உடலியல் தேவைகள்:** நல்ல காற்றோட்ட வசதி, சரியான தட்பவெப்பநிலை மற்றும் போதிய வெளிச்சம் பெறுவதற்கு வீடு சரியான திசை நோக்கியும், போதுமான வெளிச்சம், காற்று வசதிகள் கொண்டும் இருக்க வேண்டும்.
- **உள்ளத் தேவைகள்:** வீட்டில் பாதுகாப்பு வசதியும், மறைவும் இருக்க வேண்டும்.
- **குடும்ப நபர்களின் எண்ணிக்கை:** குடும்பத்தில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நான்கு நபர்கள் உள்ள சிறிய குடும்பத்திற்குத் தேவைப்படும் வீட்டின்அளவை விட ஆறுநபர்கள் கொண்ட பெரிய குடும்பத்திற்கு பெரிய வீடு தேவைப்படும்.
- **குடும்பத்தின் வகைகள்:** குடும்பங்களைத் தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் எனப் பிரிக்கலாம். ஒரு வீட்டின் அளவு அக்குடும்ப வகையைப் பொறுத்து மாறுபடும்.
- **வாழ்க்கைச் சுழற்சியில் குடும்ப நிலை:** குடும்பம் விரிவடையும் நிலை அல்லது குறுகும் நிலையைப் பொறுத்து வீட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குறுகும் குடும்பத்தை விட விரிவடையும் குடும்பத்திற்கு பெரிய வீடு தேவைப்படும்.



XII Std - Home Science TM_Unit 5.indd 140 20-04-2020 2.14.54 PM

- **குடியிருப்பின் நிரந்தரத் தன்மை:** இதில் இருவகையான குடும்பங்கள் உள்ளன.
    1. இடமாறும் குடும்பம் (Transient family) - தொழில் மற்றும் வேலை காரணமாகவோ மற்றும் வேறு தேவைகள் காரணமாகவோ ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறும் சூழ்நிலைகள் உள்ள குடும்பம்.
    2. நிரந்தரக் குடும்பம் (Permanent Family) - நீண்ட நாட்களுக்கு ஒரே இடத்தில் வசிக்கும் குடும்பம்.

    இவற்றைக் கருத்தில் கொண்டு, சொந்த வீடு வாங்குவதா? அல்லது வாடகை வீட்டில் குடியிருப்பதா? என்று நன்கு யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.
- **செலவுகளின் அளவு:** வீட்டைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் அந்த இடத்தின் செலவுகளின் அளவை மனதில் கொள்ள வேண்டும்.
- **கட்டிடச் செலவு:** வீட்டை வாங்குவதற்கு முன் குடும்பத்தின் பொருளதார நிலையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 5.1.4 சொந்த வீடு அல்லது வாடகை வீடு

பொதுவாக, பல குடும்பங்கள் வாடகை வீட்டில் இருப்பதைவிட சொந்த வீட்டில் வசிப்பது மிகச் சிறந்தது எனக் கருதுகின்றனர்.

| **சொந்த வீடு:** சொந்த வீடு என்பது முழுமையாக சொந்த உபயோகத்திற்கானதாகும். | **வாடகை வீடு:** வாடகை வீடு என்பது வீட்டின் சொந்தக்காரருக்கு வீட்டைப் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்படும் ஈட்டுத் தொகையாகும். |
|---|---|
| சொந்த வீட்டின் பயன்கள் | வாடகை வீட்டின் பயன்கள் |
| 1. பாதுகாப்பு உணர்வும் சொத்துரிமை உணர்வும் மக்களுக்கும் ஏற்படும். | வாடகைக்கு வீடு எடுப்பது மிகவும் எளிது. |
| 2. அன்டை வீட்டாருடன் நிரந்தர நட்புறவை வளர்த்துக் கொள்ள உதவுகிறது, | குடும்பத்தின் தேவை மற்றும் வருமானத்திற்கு ஏற்ப வீட்டை மாற்றிக் கொள்ளலாம். |
| 3. கட்டாய சேமிப்பிற்கான ஓர் வழி முறையாகும். | சொந்தமாக வீடு வாங்கும் பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்து அதிக இலாபம் ஈட்டலாம். |
| 4. நீண்ட நாட்கள் ஒரே வீட்டில் வசிக்கலாம். | சொத்துத்தை பராமரிக்காக வேண்டிய பொறுப்பு இல்லை |
| 5. தேவைப்படும் போது அல்லது விரும்பும் போது வீட்டின் அமைப்பில் மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். | இடம் பெயர்ந்து செல்லக்கூடிய சுதந்திரம் உள்ளது. |
| 6. மகிழ்ச்சி, பெருமை மற்றும் முதிர்வயதில் பாதுகாப்பு ஆகியவற்றை அளிக்கிறது. | உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடையலாம். |



XII Std - Home Science TM_Unit 5.indd 141 20-04-2020 2.14.54 PM

| | |
|---|---|
| 7. கடன் பெறுவது எளிது | வெவ்வேறு தொழில்வாய்ப்புகளின் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். |
| 8. ஒரு சிறந்த முதலீடாகும் | பொருளாதார சுதந்திரம் உண்டு. |
| 9. வருவானவரிச் சலுகைகள் உள்ளது. | சொத்து அல்லது மனையின் மதிப்பு குறைந்தால் எந்தப் பாதிப்பும் கிடையாது |
| 10. சிறந்த அறைகலன்கள் வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ளலாம். | அறைகலன் (Furniture) அதிகம் வாங்க வேண்டிய அவசியமில்லை, மற்றும் அறைகலன்களுடன் கூடிய வீட்டையே வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். |

## 5.2 வீடுகட்ட மனை தேர்ந்தெடுத்தல்

ஒவ்வொரு குடும்பமும் தன் வீட்டின் தேவையை நல்ல இருப்பிடத்தைத் தேர்ந்தெடுப்பதின் மூலம் பூர்த்தி செய்து கொள்கின்றன. ஒருவரின் வாழ்க்கையில் அதிகபட்சமான ஒரே முதலீடு என்பது சந்தேகமின்றி வீடு எனலாம். இதனால் அடிக்கடி வசிக்கும் இடத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை. வீடுகட்ட விரும்புவோர், அதை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். மனையை ஒரு நல்ல வசதியான இடத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### 5.2.1 மனைக்கான இடம் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் பின்வருமாறு:

#### I. இயற்கை அமைப்புகள்

a) வீடுகட்டும் நிலம் ஒழுங்கான வடிவம் கொண்டதாகவும் நான்கு புறமும் எல்லைகள் சரிவரக் குறிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

b) தாழ்வான இடம் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியது ஏனென்றால் அங்கு மழை நீர் தேங்கி ஈரமாக இருப்பதுடன், ஈக்கள் மற்றும் கொசுக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமைந்து விடுகின்றது.

c) மனை அமைக்கும் இடம் மேட்டுப்பாங்கான நிலத்தில் இருப்பது அவசியம். ஏனென்றால் மழைக்காலங்களில் மேடான இடத்தில் மழைநீர் தேங்காமல் இருக்கும்.

d) மேடான இடத்தில் வீடு கட்டினால் வீட்டின் அழகு எடுப்பாகத் தெரியும். தெற்கு வடக்கு பார்த்த நிலமாக இருத்தல் நல்லது.

#### II. மண்ணின் தன்மை

a) நல்ல மண் என்பது மேற்பரப்பில் மிருதுவான மண்ணும், கீழே 3 அல்லது 4 அடி ஆழத்தில் கடினமான மணலும் ஆகும்.

b) மணலும் சிறுகற்களும் கலந்தவாறு இருப்பதே நல்லது.

c) பாறை நிலத்தில் அஸ்திவாரம் உறுதியாக அமைந்தாலும் கழிவுநீர்க் குழாய்கள் (drainage) போடுவதும் கிணறு தோண்டுவதும் கடினம் அதிக பணம் செலவழிக்க வேண்டும். பாறை நிலத்தில் செடிகளும் வராது.

d) களிமண் மற்றும் மணற்பாங்கான இடத்தில் வீடுகட்ட உகந்ததல்ல, காரணம் களிமண் நிலம் நீரை அதிக காலம் தக்க வைத்துக் கொள்ளும் மற்றும் மணற்பாங்கான இடம் தண்ணீரை உறிஞ்சிவிடும்.



XII Std - Home Science TM_Unit 5.indd 142 20-04-2020 2.14.54 PM

### III. சுகாதார வசதிகள்

a) வீடுகட்டும் நிலத்தைச் சுற்றி, குளம், குட்டை, தண்ணீர் தேங்கி நிற்கும் பாழடைந்த கிணறுகள் இல்லாமல் இருத்தல் வேண்டும்.

b) நிலத்தினருகில் பொதுக் கழிப்பறை மற்றும் சாக்கடை இல்லாதிருத்தல் வேண்டும்.

c) குடும்பத்தினர் உடல் நலன் கருதி மாட்டுத்தொழுவம், கோழிப்பண்ணை, தொழிற்சாலை அருகில் நிலத்தை தேர்ந்தெடுத்தல் கூடாது.

d) ஒரு காலத்தில் குழியாக இருந்துப் பின்னர் அழுகிய இலை தழைகளையும் சாணத்தையும் நிரப்பி உரக்குழி போடப்பட்டு மேடாக உயர்த்தப்பட்ட இடங்களிலும் வீட்டைக் கட்டுவது நல்லதல்ல. இத்தகைய சீர்படுத்தப்பட்ட நிலங்களில் அஸ்திவாரம் உறுதியாக அமையாது. மேலும் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கும் போது துர்நாற்றம் வீசுவதுடன் ஈ, கொசு போன்ற பூச்சிகள் வாழுமிடமாகவும் மாறிவிடும்.

e) சுத்தமான காற்றும், போதிய வெளிச்சமும், நல்ல தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும்.

f) அதிக நெருக்கடியான இடத்தில் வாகனங்களின் புகையும், தூசியும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் ஆரோக்கிய கேடு விளைவிடுக்கும். ஆதலால் அத்தகு இடத்தில் மனையைத் தேர்ந்தெடுக்கக் கூடாது.

g) நவீன சுகாதார வசதிகள் நிறைந்த நிலத்தைத் தேர்ந்தெடுப்பது உகந்தது.

### IV. நடைமுறை வசதிகள்

a) வீடுகட்டும் நிலத்தின் மதிப்பு அவ்விடத்தைச் சுற்றி அமைந்துள்ள வசதிகளைப் பொறுத்து மதிப்பிடப்படுகின்றது.

b) பள்ளிக் கூடம், அங்காடிகள் (markets), வங்கி, மருத்துவமனை, இரயில்நிலையம், பேருந்து நிலையம், தபால் நிலையம் ஆகியவை நடந்து செல்லும் தூரத்தில் இருக்குமாறு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### V. நல்ல சுற்றுப்புறத்தன்மை

a) நல்ல முன்னேற்றமடைந்த இடத்தில் நிலம் வாங்குவது நல்லது.

b) அருகில் இருப்பவர்கள் நல்லவர்களாக இருந்தால் குடும்பத்தினரின் நிரந்தரமான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

c) கடலோரப் பகுதியில் மனை அமைந்தால் புத்துணர்வூட்டும் வகையில் கடல் காற்று கிடைக்கும். ஆனால் இதில் உள்ள குறைபாடு என்னவென்றால் கடல் காற்றின் உப்பு கலந்த நீரித்துளிகளால் வீட்டிலுள்ள இரும்புப் பொருட்கள் துருப்பிடித்து வீணாவதற்கு வாய்ப்புள்ளது.

### VI. சட்ட நுணுக்கங்கள்

a) சட்டப் பூர்வமாக நிலத்தைப் பற்றிய குறிப்புகள், நிலம் அமைந்திருக்கும் இடம் பற்றி குறிப்புகளைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

b) எவ்வித சட்டச்சிக்கலும் இல்லாத நிலமாக இருக்க வேண்டும்.

c) சட்ட வல்லுநரைக் கலந்தாலோசித்து, நிலத்தின் எல்லைகளைக் கணித்து சரியான பரப்பளவு உள்ளதா என்று பார்த்து வாங்க வேண்டும்.


## 5.2.2 வீட்டில் உள்ள அறைகளை ஒதுக்குவதற்கான கொள்கைகள்

வீட்டில் உள்ள அறைகளை ஒதுக்குவதற்கான கொள்கைகளாவன வெளியமைப்பு, முகப்புத்தோற்றம், மறைவு, அறையின் கூட்டமைப்பு,



XII Std - Home Science TM_Unit 5.indd 143 20-04-2020 2.14.54 PM

இடச்சிக்கனம், அறைகலன்களின் தேவை, செல்லும் வழி, தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளுதல், சுகாதாரம் மற்றும் நடைமுறை கவனங்களாகும்.




வீட்டு அறைகளை ஒதுக்குவதற்கான கொள்கைகள்

### i. வெளியமைப்பு (Aspect)

- வெளியமைப்பு என்பது சுத்தமான காற்று, சூரிய ஒளி, இயற்கைக் காட்சிகள் முதலியவற்றை அனுபவிக்க உதவும் வெளிச்சுவற்றில் உள்ள கதவுகள் மற்றும் சாளரங்களின் அமைப்பைக் குறிக்கின்றது. ஆரோக்கியத்தின் அடிப்படையிலும் வெளியமைப்பு முக்கியமாக கருதப்படுகிறது.
- சாளரங்களை கவனமாக அமைப்பதின் மூலம், நாம் விரும்பும் எந்த அறையிலும் சூரிய வெளிச்சத்தைப் பெற முடியும் காலை சூரிய ஒளிக் கதிர்கள் அறையிலுள்ள காற்றைச் சுத்தப்படுத்த ஏதுவாக சமையலறையைக் கிழக்கு நோக்கி அமைத்தல் வேண்டும்.
- படுக்கை அறை தெற்கு நோக்கியதாக அமைய வேண்டும். தென்கிழக்கு அல்லது தென்மேற்கு பக்கமாக அமைந்தால் காற்று வசதி கிடைக்கும்.
- வசிக்கும் அறை வடகிழக்கு அல்லது தென்கிழக்கு திசை நோக்கியிருக்கும்படி அமைக்க வேண்டும்.

### ii. முகப்புத் தோற்றம் (prospect)

இது வெளியிலிருந்து வீட்டை நோக்குவோர் மீது அந்த வீடு ஏற்படுத்துகின்ற எண்ணம் ஆகும். வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு வீடு கவர்ச்சிகரமாகவும், நாகரீக முறையிலும், உற்சாகம் அளிக்கும் வகையிலும் மற்றும் வசதியானதாகவும் தோற்றமளிக்க வேண்டும்.

அழகான பலகணி, செதுக்கப்பட்ட தூண்கள், எளிய நாகரீக முறையில் அமைந்த கூரைகள் (Roofs) மற்றும் சுவர்கள் வீட்டிற்கு அழகான தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

### iii. மறைவு (privacy)

மறைவு என்பது இருவகைப்படும்- தெருவிலிருந்து முழு வீட்டிற்கே மறைவு ஏற்படுத்துவது; ஒவ்வோர் அறையையும் மற்ற அறைகளிலிருந்தும், தாழ்வாரத்திலிருந்தும் மறைப்பது

வீட்டின் முன்னால் மரங்கள், செடிகள், வளர்த்தும் மதில் சுவர் எழுப்பியும் வீட்டைத் தெருவிலிருந்து முழுவதுமாக மறைக்கலாம்.

வீட்டினுள் மறைவை ஏற்படுத்த கதவுகளையும், சன்னல்களையும் சரிவர அமைத்தல் வேண்டும்.

படுக்கை அறை, குளியல் மற்றும் கழிப்பறைகளைக் கட்டும்போது மறைவு அம்சத்தைக் கட்டாயமாக மனத்தில் கொள்ள வேண்டும்.

### iv. அறையின் கூட்டமைப்பு (Grouping)

- வீட்டில் நடைபெறுகின்ற வேலைகளுக்கேற்ப அறைகள் ஒன்றுக்கொன்று தொடர்பாக அருகருகே அமைத்தல் வேண்டும்.
- சாப்பிடும் அறை சமையலறைக்கு அருகிலும், வசிக்கும் அறையை



XII Std - Home Science TM_Unit 5.indd 144 20-04-2020 2.14.54 PM

தாழ்வாரத்தின் அருகிலும், குளியல் மற்றும் கழிவறையை படுக்கை அறைக்குப் பக்கத்திலும் அமைத்தல் வேண்டும்.

- அறையின் கூட்டமைப்பை நம் தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம்.

### v. இடச்சிக்கனம் (Roominess)

- வீட்டின் உள்ளிடத்தை பெரிதாக்கிக் காட்டும் வண்ணம் வீட்டை கட்டுதல் வேண்டும். இருக்கின்ற இடத்தை முழுவதுமாக பயன்படுத்தி கொள்ள வேண்டியது அவசியம்.
- சேமித்து வைக்க வீட்டு சுவற்றில் அலமாரிகளைப் பதித்தும், கூரைக்கடியில் பரண்களை அமைத்தும் தரைப்பகுதியை மிகுதிப் படுத்தி வேறு வேலைகளுக்கு பயன்படுத்தலாம்.
- மாடிப் படியின் கீழே இருக்கும் சிறிய இடத்தையும், சன்னல் திட்டுக்களையும், பரன்களையும் பொருட்கள் சேமிக்க பயன்படுத்தலாம்.
- அறையின் அளவு, வடிவம் இருக்கையின் எண்ணிக்கை அவைகளை அமைக்கும் ஏற்பாடு மற்றும் நிறச்சேர்க்கைகள் மூலம் ஒரு அறையின் அளவைக் கூடுதலாக காண்பிக்கலாம்.

### vi. அறைகலன் தேவைகள் (Furniture Requirement)

அறைகளை அமைக்கும் போதே அவ்வறைகளில் வைத்துப் பயன்படுத்தப் போகும் இருக்கைகளை மனதில் கொள்ள வேண்டும். அறைகலன்களை போட வேண்டிய இடம், அளவு மற்றும் எண்ணிக்கை இவற்றை அவ்வறையில் அமைக்கப்படும் கதவு, சன்னல் சுவற்றில் கட்டப்பட்ட அலமாரிகளின் அளவோடு ஒப்பிட்டு முதலிலேயே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

### vii. வீட்டினுள் வழி அமைத்தல் (Circulation)

- ஓர் அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்லும் வழி இருப்பது நல்லது. நல்ல வழி என்பது ஒவ்வொரு அறைக்கும் பொதுவான இடத்திலிருந்து செல்லும்படியாக வழியமைத்தல் வேண்டும்.
- வீட்டினில் மறைவு ஏற்படுத்துவதன் மூலம் குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் வேலைகளை இடையூறு இல்லாமல் செய்ய இயலும்.
- வழி என்பது நேராகவும், சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
- வழி அமைத்தல் என்பது சரியான இடத்தில் கதவு பொருத்துவதுடன், அறைகளையும் அறைகலன்களையும் ஒழுங்காகக் கூட்டமைப்பு செய்வதாகும்.

### viii. தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளுதல் (Flexibility)

- தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளுதல் என்பது ஓர் அறையைக் குறிப்பிட்ட ஒரு செயலுக்காக வடிவமைத்து, பின்னர் தேவைக்கேற்ப பல்வேறு விழாக்களில் பல்வேறு செயல்களுக்கு பயன்படுத்துவது ஆகும்.
- விழாக்காலங்களில் வசிக்கும் அறையை) உணவருந்தும் அறையாகவும், சமையலறையில் அருகிலுள்ள தாழ்வாரத்தைக் குழந்தைகள் விளையாடும் கூடமாகப் பயன்படுத்தல், உணவருந்தும் அறையை குழந்தைகள் படிக்கும் அறையாகவும் அல்லது விளையாடும் அறையாக பயன்படுத்தல் போன்றவை உதாரணங்களாகும்.
- திரைச் சீலைகள், மரத்தால் அல்லது உலோகத்தாலான மடிக்கக்கூடிய திரைகள் (Folding Screen) அலமாரிகள் மூலம் ஒரு கூடத்தைத் தடுத்து பல செயல்களுக்கு இடவசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

### ix. சுகாதாரம் (Sanitation)

- சுகாதாரம் என்பது வெளிச்சம், காற்றோட்டம் மற்றும் பொது சுகாதார வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகும்.
- வீட்டில் எந்த அறையிலும் போதுமான வெளிச்சம் இல்லாமல் இருக்கக்கூடாது.
- போதுமான காற்றோட்ட வசதி இருத்தல் அவசியம் சுத்தமான காற்று உள்ளே வரவும் அசுத்தமான காற்று வெளியே செல்லவும் வசதி இருத்தல் வேண்டும்.
- எதிர் எதிர் பக்கமாகக் கதவு மற்றும் சன்னல்கள் அமைந்தால் காற்று எளிதாகச் செல்வதற்கு வசதியாக அமையும்.
- குளியலறை, கழிப்பறை மற்றும் சமையலறை கழிவுப் பொருட்களை சுகாதார முறையில் வெளியேற்ற முறையான திட்டமிடுதல் வேண்டும்.

### x. நடைமுறையில் கவனிக்க வேண்டியவை ( Practical consideration)

வீடு கட்டுவதற்கு முன் கீழ்கண்ட அம்சங்கள் அமையுமாறு திட்டமிட்டு கட்டுதல் வேண்டும். உறுதியான கட்டிட அமைப்புடனும் எல்லா வசதிகளுடனும், எளிமையானதாகவும், வசீகரம் உடையதாகவும், பிற்காலத்தில் தேவை ஏற்பட்டால் விரிவுபடுத்த முடிந்ததாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக சிக்கனமாகவும் இருக்க வேண்டும்.

## 5.3 வீட்டில் நடைபெறும் செயல்கள் மற்றும் அவைகளுக்கு ஒதுக்கப்படும் இடம்

வீட்டில் பலவிதமான செயல்கள் நடைபெறுகிறது. ஒவ்வொரு செயல்களையும் செய்ய இடம் தேவைப்படுகிறது. சிறிய இடத்தில் பல செயல்கள் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே திறமையான முறையில் இருக்கும் இடத்தைப் பயன்படுத்த வேண்டும். வீட்டில் நடைபெறும் சில செயல்களும், அவற்றிக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்கள் பின்வருமாறு.

அட்டவணை -1 வீட்டில் நடைபெறும் செயல்கள் மற்றும் இட ஒதுக்கீடு

| எண் | வீட்டில் நடைபெறும் செயல்கள் | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தூங்குதல் | படுக்கை அறை |
| 2. | சமைத்தல் | சமையல் அறை |
| 3. | உணவு அருந்துதல் | உணவு அருந்தும் அறை |
| 4. | துணிகளை துவைத்தல் | துணி துவைக்கும் இடம்/ குளியல் அறை |
| 5. | பாத்திரங்களை கழுவுதல் | சமையல் அறை |
| 6. | படித்தல் | படிக்கும் அறை/ குழந்தைகள் அறை/ படுக்கை அறை/ உணவு அருந்தும் அறை |
| 7. | விருந்தினர்கள் தங்குதல் | விருந்தினர் அறை |
| 8. | குளித்தல் | குளியல் அறை |
| 9. | பொழுது போக்குதல் | வசிக்கும் அறை |

சில நேரங்களில் ஒவ்வொரு செயல்களுக்கும் இடம் ஒதுக்குதல் என்பது சாத்தியமில்லை.சிறியவீட்டில்,பலசெயல்கள், ஒரே இடத்தில் தான் செய்யப்படுகின்றது. உதாரணமாக படிப்பதற்கும், உடைகள் உடுத்தவும் தனி இடம் இல்லாத காரணத்தால் படுக்கை அறையையே பயன்படுத்துகின்றனர். பல்வேறு வேலைகளை திறன்படச் செய்ய, இட மேலாண்மை பெரும் பங்கு வகிக்கிறது.



XII Std - Home Science TM_Unit 5.indd 146 20-04-2020 2.14.54 PM

## செயல்பாடு – 1

| எண் | வசிக்கும் அறை | படுக்கை அறை | படிக்கும் அறை | குழந்தைகள் அறை | சமையல் அறை | குளியல் அறை | தாழ்வாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |

### 5.3.1 வீட்டின் பயனுள்ள இட ஒதுக்கீடு

வீட்டையும், மனையையும் அங்கு நடைபெறும் செயல்களைப் பொறுத்து மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்.




1. **சமூக (அ) பொதுவான இடம்:** தாழ்வாரம், வசிக்கும் அறை, வரவேற்பறை, உணவு பரிமாறும் இடம், இசை மற்றும் விளையாடும் இடங்கள் ஆகியவை ஆகும்.
2. **சேவை (அ) வேலை செய்யும் இடம்:** சமையலறை, பரிமாறும் இடம், சலவை செய்யும் இடம், உலர்த்துமிடம், கார் நிறுத்துமிடம், சலவைப் பெட்டி போடுமிடம், சேமிக்கும் இடம், அலுவலகம் மற்றும் படிக்கும் அறைகள் ஆகும்.
3. **ஓய்வு பெறும் இடம் (அ) மறைவிடம்:** படுக்கையறை, உடுத்துமிடம், குளியலறை, வழிபாட்டறை ஆகியவை ஆகும். ஒவ்வொரு செயலுக்கும் தனித்தனியாக அறைகள் ஒதுக்குவது இயலாத ஒன்றாகும். ஆனால் முக்கியமான வேலைகளுக்குத் தனி இடம் ஒதுக்குவது அவசியமாகும்.

### 5.3.2 வீட்டில் உள்ள அறைகள்

வீட்டில் உள்ள அறைகள் மற்றும் அதில் செய்யப்படும் வேலைகளைப் பற்றி கீழ்க்கண்ட பத்திகளில் காண்போம்.

தாழ்வாரம் பற்பல விதங்களில் பயன்படுகிறது. வீட்டிற்கு வருகை புரியும் பார்வையாளர்கள் மற்றும் அதிக அறிமுகமில்லாதவர்கள் காத்திருக்க ஏற்ற இடங்கள் இருக்கின்றது. செருப்பு, குடை, கைத்தடி மற்றும் சிறிய சொந்த வேலைகள் செய்வதற்குத் தகுந்த இடமாக உள்ளது. தபால்காரர், செய்தித்தாள் கொண்டு வருபவர்,



XII Std - Home Science TM_Unit 5.indd 147
20-04-2020 2.14.55 PM

பால்காரர், காய்கறி விற்பவர் வந்து நின்று கூப்பிடுவதற்கு வசதியாக உள்ளது. இது வீட்டில் உள்ள மற்ற அறைகளுக்கு செல்லும் வழியாக உள்ளது. வீட்டின் சுவர்களில் நேரடியாக சூரிய வெளிச்சம் படாதவாறு பாதுகாக்கின்றது. வீட்டில் செல்லப் பிராணிகளையும் செடிகளையும் வளர்க்கும் இடமாக உள்ளது.

### பின்புறத் தாழ்வாரம்/ பால்கனி

இங்கு மாவு அரைக்கும் இயந்திரம் வைக்கவும், துணிகளைக் காய வைக்கவும் பயன்படுத்தலாம். தாழ்வாரம் / பால்கனி தெற்கு அல்லது மேற்குப் பக்கமாக இருந்தால் வசதியாக இருக்கம்.

### வரவேற்பு அறை

தாழ்வாரத்திற்கு அடுத்த படியாக அமையுமிடம் வரவேற்பு அறையாகும். வரவேற்பு அறை குடும்பத்தினரின் பல செயல்களான படித்தல், பேசுதல், ஒன்று கூடி மகிழ்தல், விருந்தினரை உபசரித்தல், உள் விளையாட்டுகள் விளையாடுதல் இசையைக் கேட்டல் ஆகியவற்றை பூர்த்தி செய்யும் வகையில் இருத்தல் வேண்டும். சில சிறிய வீடுகளில் படிக்கும் அறையாகவும் இரவில் ஒன்று(அ) இரண்டு நபர்கள் படுக்கும் அறையாகவும் பிரத்யேகமான தருணங்களில் விருந்து உண்ணும் அறையாகவும் விருந்தினர் தங்குமிடமாகவும் மாற்றப்படுகிறது. குடும்ப 'வகையைப் பொறுத்து பற்பல செயல்களைச் செய்யும் இடமாக உள்ளது. வரவேற்பு அறை விருந்தினருக்கு நல்ல வரவேற்பு அளிக்கும் வண்ணம் இருத்தல் வேண்டும். வரவேற்பு அறைக்கு எற்ற வகையில் இருக்கைகளை வசதியுடன் பொருத்தமாக அமைக்க வேண்டும்.

தகுந்த படங்கள், கலைநயமிக்க பொருட்களைக் கொண்டு அறையை அழகுப்படுத்த போதுமான இடவசதி தேவை. மலர் அலங்காரங்கள், வரவேற்பு அறைக்கு மேலும் அழகு சேர்க்கும். கலைப்பொருட்களை வைப்பதற்கு சுவரில் கட்டப்பட்ட அலமாரி, மேசைகள் அவசியமாகும்.

**உதாரணமாக**

| | | |
|---|---|---|
| உட்கார்ந்து பேசுவதற்கு | - | சொகுசு நாற்காலி, சாய்வு நாற்காலி |
| விருந்தோம்புதலுக்கு | - | சிறிய தாழ்வான மேசை |
| படிப்பதற்கு | - | மேசை, நாற்காலி, புத்தக அலமாரி |
| பொழுது போக்கது | - | வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி |

### படுக்கை அறை

வீட்டின் மறைவு பகுதியில் படுக்கை அறை இருத்தல் வேண்டும் இவ்வறை உறங்குவதற்கும் ஒய்வெடுக்க, படிக்கவும் பயன்படுகிறது. ஆடைகளை சேமிக்கும் இடமாகவும் உடை உடுத்தும் இடமாகவும் பயன்படுகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கை படுக்கை அறையில் கழிக்கின்றனர். இதனை திட்டமிடும் போது மிகவும் கவனத்தடன் செயல்பட வேண்டும் எப்பொழுதும் பரப்பாக இருக்க கூடிய 'சமையல் அறை அருகே படுக்கை அறை இல்லாதவாறு பார்த்து கொள்ள வேண்டும்.

செவ்வக வடிவான அறை சதுரமான அறையைவிட வசதியானதாகும். காற்றோட்டம் படுக்கை அறைக்கு மிகவும் அவசியம், காற்று வரும் திசையை நோக்கிய படி அறையை அமைத்தல் வேண்டும். அறையைத் திறக்கும் போது உள்ளிருக்கும் படுக்கை வெளியில் தெரியாமலிருக்கும் படி கதவை ஓரமாகப் பொருத்த வேண்டும். படுக்கை அறையையொட்டி சிறிய குளியலறை அமைப்பது நவீன காலத் தேவையாக உள்ளது. துணிகளைச் சேகரிக்க இவ்வறையில் சிறிது இடம் ஒதுக்கப்பட வேண்டும். படுக்கை விரிப்பு உடுத்தும் ஆடைகள் ஆகியவற்றை சுவற்றில் அமைக்கப்பட்ட அலமாரிகளில் சேகரிக்கலாம். பல அறைகள் கொண்ட மேசை பொருத்தமான ஒன்றாகும் படுக்கையின் அருகில் சிறிய


XII Std - Home Science TM_Unit 5.indd 148 20-04-2020 2.14.55 PM

மேசை மற்றும் நாற்காலி அமைத்து பொழுதுபோக்குப் புத்தகங்களையும், மேசை விளக்கு மற்றும் மலர் அலங்காரங்களையும் வைத்துக் கொள்ளலாம்.

### குழந்தைகள் அறை

குழந்தைகள் வளர வளர அவர்களின் தேவைக்கு ஏற்ப படிப்பதற்கு, விளையாடுவதற்கு என தனி அறைகள் தேவைப்படுகிறது, அதனை கருத்தில் கொண்டு திட்டமிட வேண்டும். இடத்தை மிச்சப்படுத்த அடுக்கு படுக்கையை பயன்படுத்தலாம்.

- கூர்மையான முனைகளை உடைய அறைகலன்களை (Furniture) தவிர்ப்பது அவசியம். அறைகலன்களின் உயரம் குழந்தைகளுக்கு ஏற்றார்போல குறைவாகவும், எடை குறைவாகவும் இருக்க வேண்டும்.
- சுவற்றில் அமைக்கப்பட்ட அலமாரிகள் குழந்தைகள் எளிதில் கையாளும் உயரத்தில் இருக்க வேண்டும்.

### சமையல் அறை

சமையல் அறை என்பது வீட்டின் மையமாக உள்ளது. இது வீட்டின் கரு போன்று உள்ளது. இவ்வறை உணவுப் பொருட்கள், மளிகைச் சாமான்கள், பாத்திரங்கள், ஆகியவற்றை வைக்கும் இடமாகவும் சமைக்கும் இடமாகவும் பயன்படுகிறது. சில சமயம் உணவுண்ணும் கூடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. குடும்பத்தினரின் வசதி, மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியம், ஆகியன சமயலறையில் செய்யும் வேலையைப் பொறுத்து அமைகின்றது. சமையல் செய்யும் போது ஏற்படும் புகையினால் இல்லத்தலைவியின் கண், மூக்கு, நுரையீரல் பாதிக்கப்படாதவாறு வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் உடையதாக அமைக்கப்பட வேண்டும். சமையல் அறையில் புகைபோக்கியும்/வெளியேற்றும் விசிறியும் பயன்படுத்தி ஆவி மற்றும் புகையை போக்க வேண்டும். சமையல் அறையின் தரை எளிதில் சுத்தம் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். சமையலறையை நல்ல வசதிகளுடன் அமைப்பதில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

i. **அமைப்பு:** சமையலறையைக் கிழக்கு அல்லது வடகிழக்குத் திசை நோக்கியிருக்கும் படி அமைத்தல் வேண்டும். காலைச் சூரிய ஒளி அறையினுள் புகுந்து காற்றைச் சுத்தப்படுத்துவதுடன், காலை நேர குளிரைப் போக்கி அறையை வெதுவெதுப்பாக வைக்க இது உதவுகிறது.

ii. **அளவு மற்றும் வடிவம்:** சமையல் அறையில் திறமையாக செயல்பட மிகப்பெரியதாகவோ (அ) மிகச்சிறியதாகவோ அமைத்தல் கூடாது. செவ்வக வடிவமாக அறையை அமைப்பது நடையை மிச்சப்படுத்தும்.

iii. **செயல்கள் மற்றும் பணி மையங்கள்:** சமையல் முன்னேற்பாடுகள் செய்வது சமைப்பது, பாத்திரங்களைக் கழுவுவது ஆகியன சமையலறையில் முக்ககிய பணிகளாகும். இவற்றை சரியான முறையில் திட்டமிட்டு அமைக்க வேண்டும். பணி மையங்களை அமைக்கும் போது ஒன்றுக்கொன்று அருகாமையில் ஒரு முக்கோண வடிவத்தில் அமையும் படியும், வேலைச் செய்வதற்கேற்ற உயரத்தில் அமைப்பதன் மூலம் வசதி மற்றும் பாதுகாப்பையும் அதிகரிக்கலாம்.

- சமையல் அறை பணி மையங்களின் வெவ்வேறு வடிவங்களாவன "ட" மற்றும் "ப" வடிவச் சமையலறை, ஒரு சுவர் சமையலறை மற்றும் இரு சுவர்கள் சமையலறை ஆகும்.
- 'ப' வடிவ சமையலறை மிகவும் சிறந்ததாகும். இதில், ஒரு பாகத்தைத் தயாரிப்பு மையமாகவும், மறு பாகத்தை

சமையல் உபயோகத்திற்காகவும், நடுவிலுள்ள பகுதியை பாத்திரம் கழுவவும் பயன்படுத்தலாம். இது சரியானது மற்றும் வேலையை எளிதில் முடிக்கவும் உதவுகிறது. 'ட' வடிவ சமையலறையை அடுத்தடுத்து ஒட்டி அமைந்துள்ள இரண்டு சவர்களில் அமைக்கலாம். ஒரு சுவர் மற்றும் இரண்டு சுவர் சமையலறை, சிறிய சமையலறைக்கு ஏற்றதாகும்.

- **சமைக்கும் மையம்:** சமையல் பாத்திரங்களைப் பாதுகாப்பாக வைக்க சமையலறை மிக முக்கியமான இடமாகும். பிடி வைத்த பாத்திரங்கள் வைக்க ஆணிப்பலகை சுவரில் அமைக்கப்பட வேண்டும். கத்திகள்,தேக்கரண்டிகள், அனைத்து உணவுப் பொருட்கள், உபகரணங்கள் ஆகியவை சமையல் மையத்திற்கு அருகில் இருக்க வேண்டும். சமைக்கும் மையத்தின் முக்கிய உபகரணம் எரிவாயு அடுப்பு அல்லது பர்னர் ஆகும். எரிவாயு அடுப்பு அல்லது பர்னர் நின்று சமையல் வேலைச் செய்வதற்கேற்ற உயரத்தில் இருக்க வேண்டும்.

- **கழுவுமிடம்:** கழுவுமிடம், சமைக்கும் இடம் அருகே இருக்க வேண்டும். இங்கு தண்ணீர் மற்றும் கழிவுநீரை வெளியேற்றத் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும். பாத்திரம் துடைக்கும் துணி, புருசுகள் வைக்கும் அலமாரிகளை வசதியான இடத்தில் அமைக்க வேண்டும். கழுவும் தொட்டியைச் சன்னல் முன்பாக அமைக்க வேண்டும். கழிவுப் பொருட்களைப் போடும் வாளியை, கழுவும் தொட்டிக்களுக்கருகில் அல்லது அடியில் வைக்க வேண்டும்.

- **தயாரிப்பு மையம்:** குளிர்சாதனப் பெட்டியைத் தயாரிப்பு மையத்தின் அருகில் அமைப்பதன் மூலம் காய்கறிகள், முட்டை பால் போன்றவற்றை எளிதில் எடுக்க இயலும். சமையல் உபகரணங்களாகிய



'ட' வடிவம்



"'ப" வடிவம்



ஒரு சுவர்



இரு சுவர்கள்

*சமையலறை வடிவங்கள்*

கலவைக்கருவி, அடிக்கும் கருவி, பிடி வைத்த பாத்திரங்கள், அளவுக்குவளைகள், கரண்டிகள், கத்திகள், முதலியவற்றை தயாரிக்கும் மையங்களில் வைப்பது அவசியமாகும். பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்த தேவையான அளவு மின்சார இணைப்புகள் இருத்தல் வேண்டும்.



பெக் போர்டு

- **சமையலறையில் சேமிப்பு வசதிகள்:** சுவற்றில் கட்டப்பட்ட அலமாரிகள் அல்லது இழு அறைகள் கொண்ட அலமாரிகள் இங்கு அமைக்கப்பட வேண்டும். பூச்சிகள் வராமல் தடுப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டும். பணி மையத்திற்கு மேலும் கீழும் சுவற்றிலுள்ள இடத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

### குளியல் அறை

குளிப்பதற்கும், துவைப்பதற்கும் உடுத்துவதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே குளியலறை அமைப்பதன் நோக்கமாகும். பிரதான குளியலறையை அடித்தளத்தில் உள்ள பிரதான அறைகளின் அருகில் அமைக்க வேண்டும். படுக்கை அறையுடன் இணைந்திருந்தால் மிகவும் வசதியாக இருக்கும். காற்று மற்றும் வெளிச்சத்துடன் இருக்க வேண்டும். சன்னலைத் தரையிலிருந்து சரியான உயரத்தில் அமைக்க வேண்டும். கதவுகள் மற்றும் சன்னல்கள் மங்கலான ஒளிபுகக்கூடிய கண்ணாடிகளால் ஆனதாகவும், அதே சமயத்தில் மறைவு தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பொருட்களை சேமித்து வைக்க தேவையென்றால் சிறிய பரன் அமைத்துக்கொள்ளலாம். சோப்பு, பற்பசை, பூசு எண்ணெய் முதலியவற்றை வைக்க சிறிய அலமாரி அமைத்தல் வேண்டும். கறை படியாததாகவும், கழுவ எளிதானதாகவும் வழுக்காததாகவும் தரை இருக்க வேண்டும். சுவர்கள் தரையிலிருந்து 90செ.மீ உயரத்திற்கு வழவழப்பான மேற்பரப்பைக் கொண்டதாக இருக்க வேண்டும். குளியலறையிலிருந்து கழிவு நீரை வெளியேற்றத் தேவையான வடிகால் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

### சேமிக்கும் இடம்

கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சேமிப்பதற்குத் தேவையான வசதிகளுடன் வீட்டை அமைக்க வேண்டும். கீழ்க்காணும் காரணங்களினால் வீட்டில் நல்ல சேமிப்பிடம் தேவைப்படுகிறது.

- சேமிக்குமிடம் இருப்பதால் சரியான மற்றும் தூய்மையான சூழ்நிலை வீட்டில் உருவாகிறது.
- நேரம் மற்றும் சக்தி தேவையில்லாமல் விரையமாவதைத் தடுக்கிறது.
- பொருட்களைச் சுலபமாகக் கண்டறிய உதவுகிறது.
- ஒதுக்கிய இடத்தை முழுமையாகப் பயன்படுத்தலாம்.
- ஈக்கள், எலிகள், வண்டுகள் மற்றும் அழிவை ஏற்படுத்தும் பூச்சிகளிலிருந்தும் பொருட்களைப் பாதுகாத்துப் பதப்படுத்தலாம்.
- தூசி, சூரிய வெளிச்சம், ஈரப்பசை, கேடு விளைவிக்கும் சீதோஷ்ண நிலை,



XII Std - Home Science TM_Unit 5.indd 151 20-04-2020 2.14.55 PM

கெடுதலான மற்றும் நச்சுத்தன்மையுடைய வாயுக்களிலிருந்தும் பொருட்கள் பாதுகாக்கப்படுகிறது.

- திருட்டைத் தடுப்பதோடு பொருட்கள் காணாமல் போவதும் தடுக்கப்படுகிறது.
- குழந்தைகள் எடுக்க முடியாதபடி பொருட்களைச் சேமித்துப் பாதுகாக்க முடிகிறது.

வீட்டில் பாதுகாக்கப்படும் பொருட்களாவன- ஆடைகள், படுக்கை விரிப்புகள், உணவுப்பொருட்கள், சமையலறைச் சாமான்கள், விளையாட்டுச் சாதனங்கள், தோட்டக்கலை கருவிகள், தூய்மைப்படுத்தும் பொருட்கள் மற்றும் இதர சாதனங்கள், புத்தகங்கள், மருந்துகள், கிருமிநாசினிகள், பொழுது போக்குச் சாதனங்கள் முதலானவையாகும்.வீட்டின் பரன்கள் சிறு அலமாரிகள் சுவற்றில் கட்டப்பட்ட அலமாரி ஆகியவற்றை சேமிப்பு இடமாக பயன்படுத்தலாம்.

சேமிக்குமிடத்தைத் திட்டமிடும்போது கீழ்க்கண்ட குறிப்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

1. வேலைசெய்யும் இடத்திற்கு அருகிலேயே பொருட்களையும், சாதனங்களையும் வைக்க வேண்டும்.
2. பொருட்களை சரியான உயரத்தில் வைப்பதன் மூலம் உடலுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கலாம்.
3. பொருட்களை முறையாக வைக்க வேண்டும்.
4. ஒரே மாதிரியான பொருட்களை ஒன்றாக வைக்கலாம்.
5. சேமிக்கப்பட்ட பொருட்களை வெளிப்புறத்தில் பெயர் எழுதிச் சேமிக்க வேண்டும்.

## 5.4 மனை உள்அலங்காரம்

அலங்காரம் என்பது அழகு, செயற்பாங்கு மற்றும் வெளிப்படுத்தும் தன்மையைக் குறிக்கிறது. அழகு என்பது கண்கள் மற்றும் காதிற்கு மகிழ்ச்சியளிப்பது. செயற்பாங்கு என்பது உபயோகத்தை குறித்தது, வெளிப்பாடு என்பது குறிப்பிட்ட கருத்து அல்லது கரு. வெதுவெதுப்பு, குளிர்ச்சி, நுட்பம், நெருக்கம், இயற்கை மற்றும் ரசனை போன்ற கருத்துக்களை மனையில் வெளிப்படுத்த முடியும்.

தரைகள், சுவர்கள் மற்றும் மேற்கூரை கொண்டு கட்டப்படும் வீட்டினை பார்க்க அழகாகவும் வசதியாகவும் மாற்ற ரசனையுடன் கூடிய உள்அலங்காரம் தேவைப்படுகிறது. நம் வீடு அழகாக இருக்கும் போது நாம் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகிறோம். கீட்ஸ் கூற்றின்படி அழகுடைய பொருட்கள் என்றும் மகிழ்ச்சியைத் தரும். அனைவருமே தன்னிடம் (அ) தன்னைச்சுற்றி அழகான பொருள்கள் இருப்பதையே அனுபவித்து மகிழ்கிறார்கள். ஒருவரின் கற்பனைத்திறன் கலைநய உணர்வு மற்றும் அழகுணர்ச்சி போன்றவை மனையை அழகுபடுத்தவும், செயற்பாங்குடனும் அலங்கரிக்கவும் தேவைப்படுகிறது.

மனை உள் அலங்காரம் என்பது மக்களின் கலாச்சாரம் மற்றும் அடிப்படை தேவைக்கேற்ப இடத்தையும் உபகரணத்தையும் சரிசெய்வதாகும். நிறங்களையும் அலங்கார பொருட்களையும் கொண்டு வீட்டை அலங்கரிப்பது ஒரு வழியாகும். பொருத்தமாக நிறங்களையும் அலங்கார பொருட்களையும் தேர்ந்தெடுப்பது வீட்டை அலங்கரிக்க உதவும் ஓர் வழி முறையாகும் அலங்கார பொருட்களான திரைச்சீலை, விளக்குகள், தரை விரிப்புகள், மெத்தை, மலர் ஜாடிகள், தொட்டிசெடிகள் மற்றும் பல கலை பொருட்களான சிலைகள் போன்றவை உள்அலங்காரத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. கலைப்பொருட்களில் உள்ள வடிவங்களானது அவற்றை தனித்துவத்துடனும் அழகாகவும் வெயிப்படுத்துகிறது.



XII Std - Home Science TM_Unit 5.indd 152 20-04-2020 2.14.56 PM

## வடிவமைப்பு

வடிவமைப்பை உருவாக்கும் போது பொருட்களை இரண்டு தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுத்து அமைக்க வேண்டும் அவை நியதிகள் மற்றும் அழகு ஆகும். இவற்றில் நியதி என்பது உருவ அமைப்பையும், அழகு என்பது தனியொருவரின் யோசனைக்கேற்ப குணங்களை வெளிப்படுத்துதல் ஆகும். வடிவம் ஒன்றை உருவாக்கும் போது வடிவமைப்பாளர் தன் யோசனைகளையும், மனநிலையையும், மதிப்பையும் வெளிப்படுத்தலாம். இவ்வெளிப்பாடானது காண்போர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். வடிவமைப்பு என்பது கோடு, உருவம், நிறம் மற்றும் பொருட்களின் புறத்தோற்றத் தன்மை ஆகியவற்றின் தேர்வு மற்றும் அமைப்பு அல்லது துண்டு காகிதத்தில் மேற்கூறியவாறு வரைதல் ஆகும். நல்ல வடிவமைப்பு என்பது நியதியுடன் அடுக்கிவைக்கப்பட்டு அழுகுடன் நிறைவு செய்யப்பட்ட பொருளாகும்.

அழகான கலைப்பொருள்களில் உள்ள பொதுவான குணாதிசியங்கள் சில கொள்கைகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு கலைப்பொருளும் இக்கொள்கைகள் கொண்டு

### வடிவமைப்பு இரண்டு வகைப்படும்

| கட்டட வடிவமைப்பு | அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்பு |
|---|---|
| பொருளின் பரிமாணம், தன்மை, நிறம், புறத்தோற்றத் தன்மை இவைகளால் உருவாவது தான் கட்டட வடிவம். இந்த வடிவம் ஒவ்வொரு பொருளுக்கும் அவசியமாகும். | கட்டட வடிவத்தின் அழகை அதிகப்படுத்துவதே அலங்கரிக்கப்பட்ட வடிவமாகும். இது வடிவத்தின் தோற்ற மதிப்பை அதிகமாக்குகிறது. |
| **நல்ல கட்டிட வடிவத்தின் அம்சங்கள்**<br>1. எளிமையானதாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.<br>2. எக்காரணத்துக்கான அமைக்கப்பட்டதோ அதற்கேற்றாற் போல் இருக்க வேண்டும். பொருளின் உருவத்தை வலுப்படுத்துவதாக அமைய வேண்டும்<br>3. சரியமைப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும்.<br>4. எப்பொருளில் செய்யப்பட்டதோ அதற்கு ஒத்தாற் போல் அமைய வேண்டும்.<br>5. உண்மைத்தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும். | **நல்ல அலங்கரிக்கப்பட்ட வடிவத்தின் அம்சங்கள்**<br>1. அலங்கரிப்பு மிதமான அளவோடு இருக்க வேண்டும்.<br>2. வடிவத்தின் முக்கியமான பகுதியில் மட்டும் அலங்கரிப்பு இருக்க வேண்டும். பொருளின் உருவத்தை வலுப்படுத்துவதாக அமைய வேண்டும்.<br>3. போதுமான பின்னணியுடைய வடிவம் பார்ப்பதற்கு எளிமையாகவும், மதிப்பூட்டும் அழகுடையதாகவும் இருக்க வேண்டும்.<br>4. அலங்காரம் முழுப்பரப்பிலும் அமைந்திருக்கும் போது, அது முழு பரப்பையும் மூடியிருக்க வேண்டும்.<br>5. அலங்கரிக்கப்பட்ட வடிவமானது இயற்கை, வடிவியல் வடிவமைப்பு, மற்றும் நுண்ணிய வடிவமைப்பு (abstract design) போன்றவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. |



XII Std - Home Science TM_Unit 5.indd 153 20-04-2020 2.14.56 PM

நிறைவு செய்திருப்பின் அது அனைவராலும் ரசிக்கப்படும். கலையினை ரசிப்பதற்கு அதன் குணங்கள் மற்றும் கொள்கைகளைப் பற்றிய அறிவாற்றல் அவசியம். இதன் அடிப்படையில் ஒருவர் பொருட்களில் அழகுணர்ச்சியை அறிய இயலும். தற்போது கலையின் மூலப்பொருட்களை குறித்துக் காண்போம்.

## 5.5 கலை மூலப்பொருட்கள் (Elements of arts )

கலை மூலப்பொருட்கள் என்பது கலைச்சார்ந்த செயலின் ஓர் பகுதியாக விவரிக்கப்படுகிறது. இந்த மூலப்பொருட்களே வடிவத்தின் கட்டுமானத் தொகுதிகளாக அமைந்துள்ளது. அனைத்து கலைச்செயல்களும் வடிவத்தின் கொள்கை வழிகாட்டுதலின் படி கலை மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்டது. காட்சிக்கு அடிப்படையாக உள்ள கலை மூலப்பொருட்களும் வடிவத்தின் கொள்கைகளும் ஆகும்.

கலை மூலப்பொருட்களாவன பின்வருமாறு

1. கோடு
2. உருவம் மற்றும் அமைப்பு
3. புறத்தோற்றத் தன்மை
4. இடம்
5. நிறம்

### 5.5.1 கோடு (Line)

கோடு என்பது அடிப்படை மூலப்பொருளாகும். இது வரிசையாக உள்ள புள்ளிகளை இணைப்பதன் மூலம் உருவாகிறது. மேலும் இது இரண்டு பரிமாணத்தில் உள்ளது. இதற்கு நீளம் உள்ளது ஆனால் அகலம் இல்லை. கோட்டின் மூலம் உணர்ச்சி, அசைவு, திசை, வளர்ச்சி மற்றும் மனநிலை போன்ற குணங்களை தொடர்புபடுத்தி வெளிக்காட்ட இயலும்.

**கோட்டின் வகைகள்**

i. **இடைமட்டக் கோடுகள் (Horizontal):** இடைமட்டக் கோடுகள் ஓய்வு மற்றும் இளைப்பாறும் உணர்வைத் தருகின்றது. கண்களை இடமிருந்து வலமும் வலமிருந்து இடமும் நகர்த்துவதன் மூலம் இக்கோடுகள் அகலாமான உணர்வை ஏற்படுத்துகிறது. பொருட்கள் பார்வைக்கு பரந்தும், பெருத்தும் காட்சியளிக்கும்.



ii. **நெடுக்குக் கோடுகள் (Vertical):** நெடுக்குக் கோடுகள் என்பது நிமிர்ந்து நிற்கும் மனித உடலை போன்று இருப்பதால் அது எச்சரிக்கை மற்றும் நிலைத்தத்தன்மையை குறிக்கிறது. இக்கோடானதுஉயரத்தைஅதிகப்படுத்திக் காட்டுகிறது. நெடுக்குக் கோடு வலிமையையும், முறைப்படுத்தலையும், மேன்மையினையும், ஆன்மீக செயல் உணர்வையும் தருகிறது. இக்கோடுகள் பார்வையை மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் நகர்த்துகிறது.





XII Std - Home Science TM_Unit 5.indd 154 20-04-2020 2.14.56 PM

iii **சாய்வுக் கோடுகள் (Diagonal):** இவ்வகைக் கோடுகள் சுறுசுறுப்பான தோற்றம்,அமைதியற்ற தன்மை,கிளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தும். சாய்வுக் கோடுகள் ஓடிக்கொண்டிருக்கும் உணர்வை ஏற்படுத்துவதால், அசைந்து கொண்டும் நகர்ந்து கொண்டும் இருப்பது போல் தோன்றும்.



vi. **வளைக் கோடுகள் (Curved)** இரண்டு வகைப்படும்

அ) **மேலோட்டமான ஆழமற்ற வளைவு** (Soft shallow curved line): மேலோட்டமான ஆழமற்ற வளைவானது நளினம், ஊக்கம், மகிழ்ச்சி, ஆறுதல், உணர்வு, பாதுகாப்பு, பரிச்சயம் மற்றும் ஓய்வையும் தருகின்றது.

ஆ) **ஆழமான வளைவு** (Deep acute curved line): ஆழமான வளைவானது குழப்பம், கொந்தளிப்பு மற்றும் வேகத்தை உணரவைக்கிறது.





## 5.5.2 உருவம் மற்றும் அமைப்பு (Shape & form)

உருவம் (Shape) என்பது கோடுகளால் உறுவாக்கப்பட்டதாகும் உருவம் தட்டையாகவும் மற்றும் பொதுவாக இரண்டு பரிமாணங்களில் உள்ளது. அடிப்படை வடிவங்களாவன செவ்வகம், சதுரம், முக்கோணம் மட்டும் வட்டமாகும். அமைப்பு என்பது மூன்று பரிமாணங்களில் காட்சிக் கூறுகளை ஒருங்கிணைப்பதாகும் அமைப்பானது உயரம் / நீளம் மற்றும் அகலத்துடன் கூடிய உண்மையான ஆழம்(அ) மாயையான ஆழத்தையும் கொண்டது. அடிப்படைத் தன்மைகளான கோளங்கள், கன சதுரம் மற்றும் கூம்புகள் ஆகும்.

### உருவம் மற்றும் அமைப்பின் வகைகள்

i. **இயற்கையான உருவங்கள் / அமைப்புகள்:**

இயற்கையான உருவங்கள் / அமைப்புகள் என்பது இயற்கையினின்று பெறப்பட்டதாகவும் மற்றும் ஒழுங்கற்ற (அ) சீரற்ற தன்மையுடன் உள்ள மலைகள், மலர்கள் போன்றவையாகும்.



XII Std - Home Science TM_Unit 5.indd 155 20-04-2020 2.14.57 PM

மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களும் இயற்கையான வடிவத்தை ஒத்திருக்கும்.



ii. **நுண்ணிய உருவங்கள் / அமைப்புகள்** (Abstract design): நுண்ணிய உருவம் என்பது இயற்கையான வடிவத்தின் பகட்டான (அ) எளிமையான வடிவமாகும். நுண்ணிய உருவம் எழுத்து மொழியின் உதவியினின்று ஒரு பொருளை தெரிவிப்பதோ (அ) அடையாளம் காட்டுவதோ ஆகும். விளம்பரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றில் குறியீடு, சின்னம் போன்றவற்றை நுண்ணிய உருவம்கொண்டே உருவாக்குகிறார்கள்.



iii. **வடிவியல் உருவங்கள்/ அமைப்புகள்:** இது கணிதத்துடன் தொடர்புடைய வடிவம் மற்றும் தன்மைகளான வட்டம், சதுரம் கனம், உருளை மற்றும் கூம்புகளைக் குறிக்கிறது.



### 5.5.3 இடம் (Space)

இது பொருட்களைச் சுற்றியும், இடையிலும், மேலும் (அ) கீழும் (அ) பொருட்களின் உள்ளேயும் உள்ள இடமாகும். இடமானது இரண்டு பரிமாணங்களிலோ அதே போல் மூன்று பரிமாணங்களிலோ இருக்கும். இரண்டு பரிமாணங்களில் உள்ள இடமானது உயரத்தையும் அகலத்தையும் கொண்டது அதே சமயம் மூன்று பரிமாணங்களில் உள்ள இடமானது ஆழத்தையும் சேர்ந்ததாகும்.

இடம் சம்பந்தப்பட்ட தாக்கங்கள் (Implications of Space)


- எல்லையின்றி இருக்கும் பெரிய இடமானது திறந்தவெளி, தனிமை போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.
- சிறிய இடமானது பாதுகாப்பு மற்றும் மறைவு போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.
- நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வடிவத்தில் இடத்தை சாதுர்யமாகப் பயன்படுத்தலாம்.
- அதிகப்படியான காலியிடமானது மிகச் சிறிய இடத்தைப் போன்றே மோசமானது.

### 5.5.4 புறத்தோற்றத் தன்மை (Texture)

புறத்தோற்றத் தன்மை என்பது பொருட்களின் தரத்தைத் தொட்டு உணரும் திறன் (factile) கொண்டோ (அ) காட்சி பரிசோதனை (visual) கொண்டோ கண்டறிவதாகும். புறத்தோற்றத்



XII Std - Home Science TM_Unit 5.indd 156 20-04-2020 2.14.59 PM



சொரசொரப்பு



மென்மை



வழுவழுப்பு

தன்மையானது உரோமத்துடனும், பஞ்சு போன்ற அமைப்புடனும், வழுவழுப்புடனும், மென்மையாகவும் மற்றும் சொரசொரப்பாகவும் இருக்கும். புறத்தோற்ற தன்மை பொருட்களுக்கு அழகைச் சேர்கிறது. எந்த ஒரு கலைச்செயலை வடிவமைப்பதற்கும் புறத்தோற்றத் தன்மை மிக முக்கிய அம்சமாகும். இது வெவ்வேறு கூறுகளை ஒன்றாக்குவதற்கு (அ) தனித்துவமாக தெரிவதற்க்கும் உதவுகிறது.

புறத்தோற்றத் தன்மை இரண்டு வகைப்படும்:


- காட்சி புறத்தோற்ற தன்மை என்பது நீங்கள் பார்வையின் காண்பது ஆகும்.
- உண்மையான / தொட்டுணர்வு புறத்தோற்றத் தன்மை என்பது உங்களால் உணர முடிந்ததாகும்.

புறத்தோற்ற தன்மையின் தாக்கங்கள்

- சொரசொரப்பான தன்மை ஒழுங்கற்ற தன்மையைக் குறிக்கிறது
- மென்மையான தன்மை சீரான தன்மையைக் குறிக்கிறது.
- புறத்தோற்றத் தன்மை தனித்துவத்துடன் தெரிய வைப்பதும், ஒன்றாக தெரிய வைப்பதும் (அ) மொத்தத்தில் இருந்து தனியே பிரித்து காட்டவும் உதவுகிறது.

### 5.5.5 நிறம் (Colour)

நிறம் கலையின் முக்கியமாக மூலக்கூறு ஆகும். கண்ணின் ரெட்டினா (Retina) தூண்டலின் போது மூளையில் தோன்றும் உணர்வே நிறமாகும். சுற்றியுள்ள பொருட்களானது ஒளியின் அலைநீளத்தை உட்கிரகித்து பின் வெளியில் பிரதிபலிக்கிறது. பிரதிபலித்த ஒளியின் அலைநீளமானது கண்களில் நுளைந்து பார்வை நரம்பில் தூண்டுதலை ஏற்படுத்தி ஒளி உணர்வையும் நிறத்தையும் உருவாக்குகிறது. ஒளி அலைகளானது வெவ்வேறு அலைநீளத்துடன் சேர்ந்து வெவ்வேறு உணர்வையும் வெவ்வேறு நிறங்களையும் உருவாக்குகிறது.



பச்சை நீலம் ஆரஞ்சு மஞ்சள்

## 5.6 வடிவமைப்பின் நியதிகள்

நியதிகள் என்பது கலை வடிவத்தின் மூலக்கூறுகளைக் ஒன்றிணைப்பது அல்லது சேர்ப்பதாகும். பொருட்கள் பார்ப்பதற்கு அழகாக இருப்பதும் இல்லாததும் நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தின் அமைப்பைச்

சார்ந்தது கொள்கைகள் உதவுகிறது. கலைச்செயலையோ (அ) வடிவத்தையோ சிறப்பாக உருவாக்க இந்நியதிகள் ஒரு வழிகாட்டியாக இருக்கும். வடிவமைப்பின் நியதிகள் கீழ்வருமாறு.


1. சமநிலை (Balance)
2. சரியமைப்பு (Propostion)
3. இணைப்பு (Rhythm)
4. அழுத்திக் காட்டல் (Emphasis)
5. பொருத்தம் (அ) லயம் (Harmony (or) unity)

### 5.6.1 சமநிலை (Balance)

**சமநிலை என்பது மையக் கோட்டிலிருந்து இரு பக்கத்திலும் சமமான கவர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.** இது நிலைத்தன்மை (அ) அமைதியை ஏற்படுத்துகின்றது. சமநிலை என்பது வடிவத்தின் அடிப்படைக் நியதியாகும். சமநிலையானது கலையின் அனைத்து மூலக்கூறுகளையும் ஒருங்கிணைத்து சமப்படுத்துவதாகும். பார்வைக்கு எல்லா பொருட்களும் சமமாகவும் எந்தப் பொருளும் எதையும் மேலாதிக்கம் செய்யாமல் அமைந்திருத்தல் இருத்தல் வேண்டும். இடது மற்றும் வலது பக்கத்தில் உள்ள கலவைகளை ஒப்பிட்டு சமன்படுத்த உதவுகிறது.

சமநிலை மூன்று வகைப்படும்.

I. சீரான சமநிலை (Formal balance)
II. சீரற்ற சமநிலை (Informal Balance)
III. ஆர சமநிலை (Radial Balance)




I. **சீரான சமநிலை** (Formal balance): இந்நிலையில் சம எடையுள்ள பொருட்களை மையத்திலிருந்து சம அளவு தூரத்தில் வைப்பதால் பார்வைக்கு ஒரேமாதிரிதெரிவதுடன் முகக்கண்ணாடி வைத்து பார்பதை போன்ற உணர்வை ஏற்படுத்தும். சீரான சமநிலையானது மரியாதை, விறைப்பு, துல்லியம், கவணம், மற்றும் சரியுணர்வை குறிக்கிறது.



ii. **சீரற்ற சமநிலை(Informal Balance)** இந்த சமநிலையை ஒரே அளவு கவர்ந்திழுக்கும் சக்தியில்லாத பொருட்களை மையத்திலிருந்து வெவ்வேறு தூரங்களில் வைக்கும்போது பெறலாம். சீரற்ற சமநிலையானது நுனுக்கமாக, இயல்பாக, இயங்கு தன்மையுடன், உயிர்ப்புடன் விளங்குதோடல்லாமல் நெகிழ்வு தன்மையுடனும் இருக்கும்.





XII Std - Home Science TM_Unit 5.indd 158 20-04-2020 2.15.00 PM

iii. **ஆர சமநிலை (Radial Balance):** மூலக்கூறுகள் மையத்தை சுற்றி சமமாக அடுக்கப்படுவதன் மூலம் ஆர சமநிலையை அடைய முடியும்.



### 5.6.2 சரியமைப்பு மற்றும் அளவீடு (Proportion and scale)

சரியமைப்பு ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது. ஒரு தொகுப்பில் உள்ள வெவ்வேறு பொருட்களின் பொருத்தம் அல்லது ஒரே பொருளின் பகுதிகள் திருப்திகரமான அமைவதைச் சரியமைப்பு என்கிறோம். **அளவுகள் மற்றும் பகுதிகளின் இடையே உள்ள உறவுமுறை பொருத்தம் அல்லது முழுமைக்குமான பொருத்தத்தை சரியமைப்பு என்கிறோம். சரியமைப்பின் கொள்கையை சில சமயங்களில் 'உறவுமுறையின் விதி' என்று கூறலாம்.** இது வடிவத்திலுள்ள அளவு மற்றும் அளவீட்டின் உட்கூறுகளைக் குறிக்கிறது. இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட பொருட்களை ஒன்று சேர்க்கும் போது அத்தொகுப்பில் இனிமையும் சரியமைப்பும் கிடைக்கிறது. உதாரணமாக, சிறிய சொகுசு நற்காலியானது பெரிய அறையில் பொருந்தா அளவீட்டில் இருக்கும்.




**நினைவில் கொள்க**

அளவீடு – பொருள்களின் அளவு

சரியமைப்பு – பொருட்களின் பகுதியானது மொத்த இடத்துடன் ஒத்துப் போவது

**கிரேக்க செவ்வகம் / தங்க செவ்வகம் (Greek oblong / Golden oblong):** கிரேக்க செவ்வகம் என்பது பகுதியானது ஒன்றுடன் மற்றொன்றோ (அ) முழுவதும் சரியமைப்புடன் அமைவது. தங்க செவ்வகம் என்பது நல்ல சரியமைப்புடன் இருப்பதுடன் மற்றும் இடத்தை சுவாரஸ்யமாக பகிர்தலும் ஆகும். கிரேக்க செவ்வகத்தின் விகிதமானது 2:3 (அ) 3:5- ஆக தட்டை பரப்புகளிலும் மற்றும் 5:7:11 – ஆக திடமான பரப்புகளிலும் இருக்கும்.






### 5.6.3 இணைப்பு (Rhythm)

**இணைப்பு என்பது ஒருங்கே அமையப்பெற்றவைகளின் தொடர்ந்து நகரும் உணர்வை குறிக்கும்.** இது எந்த வடிவத்துக்கும் ஒரு அடிப்படைக் கொள்கையாக உள்ளது. ஒன்று (அ) அதற்கும் மேற்பட்ட மூலக்கூறுகளான நிறங்கள், உருவங்கள், தன்மை மற்றும் அளவுகள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும்போது தொடர்ந்து நகரும் உணர்வை ஏற்படுத்தும். கலை வேலைப்பாடுகளை பார்வையிடுவோருக்கு ஆர்வத்தையும் உந்துதலையும் தர வேறுபாடுகள் கொண்ட நகரும் உணர்வு தருவது அவசியம். ஒரு துண்டில் நகரும்



XII Std - Home Science TM_Unit 5.indd 159 20-04-2020 2.15.00 PM






உணர்வு இருக்குமாயின் அவற்றில் எந்த தடங்கலுமின்றி சுலபமாக நகரும் உணர்வை ஏற்படுத்தும். இணைப்பை நான்கு வழிகளில் ஏற்படுத்தலாம். **அது தொடர்ச்சியான கோட்டின் இயக்கம் (Continuous line), வடிவங்களைத் திரும்பத் திரும்ப உபயோகித்தல் (Repetition), அளவுகளின் முன்னேற்றப் போக்கு (Progression), மற்றும் பரவச் செய்தல் (Radiation).**

### 5.6.4 அழுத்திக் காட்டல் (Emphasis)


அழுத்திக் காட்டல் என்ற கலைக் கொள்கையானது ஒரு அமைப்பின் மிக முக்கியமான பகுதிக்கு பார்வை சென்று பின்பு அந்த அமைப்பின் மற்ற பகுதிகளுக்கு அதன் முக்கியத்தின்படி அடுத்தடுத்து செல்வதாகும். அழுத்திக் காட்டல் என்பது பார்வையிடுவோரின் கவனத்தை ஈர்க்கும் வடிவத்தின் ஒரு பகுதியாகும் கலைஞரின் விருப்பப்படி, பொருட்களை முன்னிலைப்படுத்த ஆதிக்கம் செய்யவும் மற்ற துணை பொருட்களை முன்னிலைப்படுத்தவும் முடியும். அழுத்திக்காட்டல் மூலம் ஒரு கலைச்செயலின் பகுதிகளை எடுத்துக்காட்ட முடியும்.

அழுத்திக்காட்டல் என்பது பல்வேறு வழிகளில் உருவாக்கலாம்.

- வெவ்வேறு நிறங்கள், அளவுகள், தொட்டுணர்வுகள் மற்றும் உருவங்கள் கொண்டு உருவாக்கலாம்.
- அழுத்திகாட்டலை வேறுவிதமாக அலங்காரம் செய்வதும், எதிர்புதர் நிறங்கள் கொண்டு, பொருட்களைக் குழுவாக சேர்த்தலும், பின்புலத்தில் தேவையான இடத்துடன் பொருட்களை வைப்பதும் ஆகும்.
- மையப்புள்ளி வைப்பதன் மூலம் அழுத்திகாட்டலை உருவாக்கலாம்.

### 5.6.5 பொருத்தம் (அ) லயம் (Harmony)

எந்த ஒரு வேலையிலும் அடிப்படைத் தேவையாக இருப்பது லயம் ஆகும். லயத்தின் மூலம் நம் திட்டத்தின் ஒருமைப்பாடு விளங்குகிறது. குழுவில் உள்ள அனைத்து பொருட்களும் 'ஒரே குடும்பத்தை ஒத்தும் (அ) தோழமையுடனும் இருத்தல் வேண்டும் 'லயம்' என்பது அனைத்து கலைச்செயலின் பகுதிகளிலும் பொருத்தமும் நிறைவுத் தன்மையும் இருக்கும் மேலும் அனைத்து பொருட்களுக்கும் ஒரு தொடர்ச்சியும் இருக்கும். கோல்ட்ஸ்டீன் மற்றும் கோல்ட்ஸ்டீன்.வி கூற்றின் படி பொருத்தம் என்ற கலைக்கொள்கையானது பொருட்களைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைப்பதும் அதனிடையே ஒருமித்த








XII Std - Home Science TM_Unit 5.indd 160 20-04-2020 2.15.01 PM

உணர்வு ஏற்படுத்துவதும் ஆகும். ஒரு மூலக்கூறானது ஒன்று மற்றொன்றுடன் கோடு, உருவம், தன்மை, நிறம், யோசனை, தொட்டுணர்வு போன்றவற்றின் அடிப்படையில் ஒத்திருப்பது. லயம் என்பது சிறப்பாக அமைய மேலே கூறப்பட்டுள்ள அனைத்து மூலக்கூறுகளையும் சரியான முறையில் பயன்படுத்துவதே ஆகும். தீவிர பொருத்த உணர்வை ஏற்படுத்த ஒரே மாதிரியான (pattern) மூலக்கூறு அவசியமாகிறது.



## 5.6 நிறங்கள் மற்றும் நிறப்பொருத்தங்கள் (Colour and Colour Schemes)

நிறம் என்பது அனைத்து வடிவங்களின் உள்ளார்ந்த காட்சிப் பொருளாகிறது. நமது சுற்றுச்சூழல் அமைப்புகளில் நிறங்கள் பெரும்பங்கு வகுக்கிறது. நிறங்கள் பொருட்களின் பண்புகளை எடுத்துரைக்கிறது. எனினும் ஒளி ஆதாரங்கள் மூலம் பிரதிபலித்து வடிவம் மற்றும் இடத்தினை வெளிப்படுததுகிறது. வெளிச்சம் இல்லாத இடத்தில் நிறம் தெரிவதில்லை.

ஒளிபுகா (opaque) பொருட்களில் ஒளி விழும் போது குறிப்பிட்ட அளவு ஒளி உட்கிரகிக்கப்படுகிறது. பொருட்களில் மேற்பரப்பில் உட்கிரகிக்கப்படும் ஒளியின் அலை நீளமானது மற்ற பொருட்களில் பிரதிபலிக்கப்படும். நம் கண்களானது பொருட்களில் பிரதிபலிக்கப்பட்ட நிறத்தை உள்வாங்கி பொருளின் நிறத்தை அறியச் செய்கிறது. பொருட்களின் மேற்பரப்பில் உள்ள நிறமியானது ஒளியின் அலைநீளம் (அ) ஒளிக்கற்றைகளை உட்கிரகித்து அப்பொருளின் நிறமாக வெளிப்படுத்துகிறது. உதாரணமாக சிவப்பு மேற்பரப்பு சிவப்பாக தெரியக் காரணம் நீலம் மற்றும் பச்சை வண்ண ஒளியானது மேற்பரப்பில் விழும்போது ஒளிக்கற்றையின் சிவப்பு பகுதி பிரதிபலிக்கும். அதே போல் கருப்பு மேற்பரப்பானது மொத்த ஒளிக்கற்றையையும் உட்கிரகிக்கும் மற்றும் வெள்ளை மேற்பரப்பானது அனைத்தையும் பிரதிபலிக்கும். மழைக் காலங்களில் ஒளிச்சிதரல்கள் நிறங்களாக வானவில்லில் பிரதிபலிக்கிறது. ஒளிக் கதிரானது நீர்த்துளிகளை கடந்து செல்லும் போது நீர்த்துளி முப்பட்டகமாக செயல் படுகிறது.




### 5.7.1 நிறப்பரிமாணங்கள்: (Dimension of colour)

நிறத்திற்கு மூன்று பண்புகள் (அ) குணங்கள் உள்ளது.அவை நிறப்பரிமாணங்கள் எனப்படும். ஒரு பொருளின் நீளம், அகலம், தடிமன் ஆகியவைப் போன்று நிறத்தின் பரிமானங்கள் தனித்துவமானவை. ஒவ்வொரு பொருளுக்கும் நீளம், அகலம், தடிமன் இருப்பது போல ஒவ்வொரு நிறத்திற்கும் மூன்று பண்புகளான நிறம்(HUE) மதிப்பு (Value) அடர்வு(Intensity) இருக்கும்.


XII Std - Home Science TM_Unit 5.indd 161 20-04-2020 2.15.03 PM

| நிறம் | மதிப்பு | அடர்வு |
|---|---|---|
| • நிறம் என்பது நிறத்தின் பெயரைக் குறிப்பதாகும். உதாரணமாக சிவப்பு, மஞ்சள், ஊதா மற்றும் நிறங்களின் வேறுபாட்டையும் எடுத்துரைக்கிறது. | • மதிப்பு என்பது ஒரு நிறத்தின் வெளிரிய தன்மையையோ (அ) ஆழ்ந்த நன்மையையோ வெள்ளை அல்லது கருப்பு நிறத்துடன் சம்பந்தப்படுத்தி எடுத்துரைப்பது ஆகும். | • அடர்வு என்பது ஒரு நிறத்தின் பிரகாசத்தையோ (அ) மங்கிய தன்மையையோ குறிக்கிறது. |
| • நிறங்கள் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது அவை வெப்ப மற்றும் குளிர் நிறங்கள் ஆகும். மஞ்சள், சிவப்பு நிறங்கள் வெப்ப நிறங்கள் எனவும் அவை நெருப்பு, சூரியன் வெப்பம் ஆகியவற்றை குறிக்க பயன்படுகிறது. | • வெளிரிய தன்மையை இளநிறம் (tint) என்றும், ஆழ்ந்த தன்மையை நிறமறைவு (shades) என்றும் கூறுகிறோம். | • இது தூய்மைத்தன்மை (அ) நிறைவுற்றத்தன்மையைக் குறிக்கிறது. இதன் ஒப்பீடு சாம்பல் நிறமாகும். |
| • நீலம் போன்ற நிறங்கள் குளிர் நிறங்கள் எனவும் அவை வானம் மற்றும் நீர் ஆகியவற்றைக் குறிக்க பயன்படுகிறது. | • வெள்ளை நிறத்தைச் சேர்க்கும் போது இளநிறமும் கருப்பு நிறத்தைச் சேர்க்கும் போது நிறமறைவும் உண்டாகும். | • ஒரு நிறத்திற்கும் நடுநிலைக் கோடு (அ) சாம்பல் நிறத்திற்கும் இடையேயுள்ள தூரத்தை விவரிக்க உதவுகிறது. உதாரணமாக மஞ்சள் நிறப்பழங்களான எலுமிச்சை வாழைப்பழத்தை விட பிரகாசமாக இருப்பதை அறியலாம். |
| • வெப்ப நிறங்கள் பொருட்களின் அளவைப் பெரிதாக்கி, அருகில் இருப்பது போன்ற உணர்வினையும் அதே சமயம் குளிர் நிறங்கள் பொருட்களின் அளவைக் குறைத்து, தூரத்தில் இருப்பது போன்ற உணர்வினையும் ஏற்படுத்தும். | • வெளிரிய தன்மையும் ஆழ்ந்த தன்மையும் பல்வேறுபட்ட நிறங்களைப் பயன்படுத்துவதால் உண்டாகும். | • இது நிறத்தின் தூய்மைத்தன்மையையும் அல்லது அடர்வினையும் குறிக்கப்பயன்படுகிறது |



XII Std - Home Science TM_Unit 5.indd 162 20-04-2020 2.15.03 PM

| நிறம் | மதிப்பு | அடர்வு |
|---|---|---|
| • வெப்ப நிறங்கள் மகிழ்ச்சி மற்றும் தூண்ட கூடியதாகவும் குளிர் நிறங்கள் அமைதி மற்றும் ஓய்வை உண்டாக்க கூடியதாகவும் உள்ளது. | • பளிச்சிடும் நிறங்களாக சிவப்பு மற்றும் மஞ்சளும் நீலம் அல்லது ஊதா நிறங்களை மங்கிய நிறங்களாக கருதப்படுகிறது. | • அதிகமான நிறங்களை சேர்ப்பதினால் அடர்வின் வலிமை அதிகரிக்கும். சாம்பல் நிறம் (அ) எதிர் நிறப்பொருத்த நிறங்களை சேர்ப்பதினால் அடர்வின் வலிமை மங்கிவிடும். நிறங்களை நடுநிலை செய்தல் (அ) சாம்பல் நிறப்படுத்துதலை டோன்கள் (tones) என்று அழைக்கிறோம். |
| • முன்னேற்றும் நிறங்களான மஞ்சள் மற்றும் சிவப்பு தூரத்தைக் குறைப்பதன் மூலம் ஒன்றை நோக்கி முன்னேறும். இந்நிறங்கள் அறையை சிறியதாக்கி காட்டுகிறது. | • அறையின் அடிப்பகுதியில் பளிச்சிடும் நிறங்களையும் மங்கிய நிறங்களை மேற்பகுதியிலும் சுவர்களிலும் பயன்படுத்த வேண்டும். | வெப்ப நிறங்களான மஞ்சள், ஆரஞ்சு சிவப்பு ஆகியவை அதிக அடர்வு உடையதாகவும், தூண்டக்க கூடியதாகவும் காட்சியில் எழுச்சி உடையதாகவும் இருப்பதால் சிறிய இடங்களுக்கு பயன்படுகிறது. |
| • பின்னடைவு நிறங்கள் தூரத்தை அதிகரிப்பதன் மூலம் பின் வாங்குகின்றன அதன் காரனமாக ஒரு அறையை பெரியதாக காட்டுகிறது. | • வெளிறிய தன்மை அறையின் (அ) பொருளின் அளவை அதிகரித்தும். ஆழ்ந்த தன்மை அளவை குறைத்தும் காட்டும். | குளிர் நிறங்களான நீலம், ஊதா மற்றும் பச்சை ஆகியவை குறைந்த அடர்வு உடையதாகவும் அமைதி மற்றும் ஓய்வு அளிப்பதாகவும் இருப்பதால் பெரிய இடங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. |

## நிகழ்வு ஆய்வு


1. சர்மிளாவின் படிக்கும் அறை சிறியதாக தோற்றமளிக்கிறது. அடர் ஊதா நிறம் சவருக்கு பூசப்பட்டுள்ளது. அவளின் அறை பெரியதாக தெரிய எவ்வகை மாற்றம் செய்யப்பட்ட வேண்டும்?
2. ராஜியின் வசிக்கும் அறை மிகவும் குறுகலாகவும் மற்றும் நீளமாகவும் உள்ளது. அவ்வறை சதுரமாக தெரிய அவள் என்ன செய்யவேண்டும்?

**விடைகள்:**


1. சுவற்றிற்கு வெளிரிய நிறம் பயன்படுத்துவதால் விசாலமான உணர்வு ஏற்படும். எ.கா வாழைப்பழ மஞ்சள், வெளிர் சிவப்பு
2. குறுகலான சுவருக்கு வெளிரிய நிற பூச்சு பூசப்படுவதால் அறை உள்வாங்கியும் மற்ற இரண்டு சுவருக்கு ஆழ்ந்த நிற பூச்சம் பூசப்படுவதால் அறை சிறியதாகவும் சதுரமாகவும் தோற்றமளிக்கும்.

## 5.7.2 நிறங்களின் வகைகள் – பிராங் வண்ணச் சக்கரம்

பிராங் வண்ணச் சக்கரமானது நிறங்களை ஐந்தாகப் பிரித்துள்ளது. முதன்மை நிறங்கள், இரண்டாம் நிறங்கள் இடைப்பட்ட நிறங்கள், மூன்றாம் மற்றும் நான்காம் வகை நிறங்கள் ஆகும்.




1) **முதன்மை நிறங்கள்:** அடிப்படை மூன்று நிறங்களான சிவப்பு(R) மஞ்சள்(Y) நீலம்(B) ஆகியவை வெவ்வேறு அளவுகளில் கலப்பதினால் மற்ற அனைத்து நிறங்களும் உண்டாகிறது. இவை முதன்மை நிறங்கள் என்று அழைக்கப்படுகிறது. இவை நிறங்களின் அடிப்படை மூலக்கூறுகளாகும் ஏனெனில் இம்மூன்று நிறங்களையும் நாம் மற்றெந்த நிறங்களின் கலவையினாலும் பெற இயலாது.




2) **இரண்டாம் வகை நிறங்கள்:** இரண்டு முதன்மை நிறங்களை சம அளவுகளில் கலந்தால் இரண்டாம் வகை நிறங்களை பெறலாம்.

மஞ்சள் + நீலம் = பச்சை

நீலம் +சிவப்பு = ஊதா

சிவப்பு + மஞ்சள் = ஆரஞ்சு

முதன்மை நிறங்களையும், இரண்டாம் வகை நிறங்களையும் அடிப்படை நிறங்கள் என்று அழைக்கிறோம்.

3. **இடைப்பட்ட நிறங்கள்:** முதன்மை நிறத்தையும் அதன் அருகிலுள்ள இரண்டாம் வகை நிறத்தையும் சமமாகக் கலந்தால் இடைப்பட்ட நிறங்கள் உண்டாகும். மொத்தம் ஆறு இடைப்பட்ட நிறங்கள் உள்ளன.

மஞ்சள் + பச்சை = மஞ்சள் பச்சை

நீலம் + பச்சை = நீலப்பச்சை

நீலம் + ஊதா = நீலஊதா

சிவப்பு + ஊதா = சிவப்பு ஊதா

சிவப்பு + ஆரஞ்சு = சிவப்பு ஆரஞ்சு

மஞ்சள் + ஆரஞ்சு = மஞ்சள் ஆரஞ்சு

மூன்று முதன்மை நிறங்கள் மூன்று இரண்டாம் வகை நிறங்கள் மற்றும் ஆறு இடைதரப்பட்ட நிறங்கள் சேர்ந்து பிராங் வண்ணச் சக்கரத்தின் வெளி வட்டத்தை அமைக்கின்றது.






XII Std - Home Science TM_Unit 5.indd 164 20-04-2020 2.15.03 PM

4. **மூன்றாம் வகை நிறங்கள்:** இரண்டு, இரண்டாம் வகை நிறங்களை சேர்க்கும் போது மூன்றாம் வகை நிறம் கிடைக்கிறது. மூன்றாம் வகை நிறங்கள்.

பச்சை + ஆரஞ்சு = சாம்பல் மஞ்சள் (அ) புகை மஞ்சள்

ஆரஞ்சு + ஊதா = சாம்பல் சிவப்பு(அ) பழைய செங்கல் சிவப்பு

பச்சை + ஊதா = சாம்பல் நீலம் (அ) சிலேட் நீலம்

5. **நான்காம் வகை நிறங்கள்:** இரண்டு மூன்றாம் வகை நிறங்களை ஒன்று சேர்க்கும் போது நான்காம் வகை நிறங்கள் கிடைக்கின்றன.

புகை மஞ்சள் + பழைய செங்கல் சிவப்பு = சாம்பல் ஆரஞ்சு (அ) பப்

புகைமஞ்சள் + சிலேட் நீலம் = சாம்பல் பச்சை (அ) ஆலிவ் பச்சை

பழைய செங்கல் சிவப்பு + சிலேட் நீலம் = சாம்பல் ஊதா (அ)நீலம் கலந்த சிவப்பு நிறம்.

மூன்றாம் வகை நிறங்களும், நான்காம் வகை நிறங்களும் ப்ராங் வண்ணச் சக்கரத்தின் உள்வட்டமாக அமைந்திருக்கிறது. சாம்பல் நிறம் பிராங் வண்ணச் சக்கரத்தின் மையப் பகுதியில் உள்ளது.

### 5.7.3 நிறப்பொருத்தங்கள்

பல தரப்பட்ட பகுதிகளைப் பார்ப்பதற்கு அழகாகவும், முழுமை பெற அமைப்பது பொருத்தம் எனப்படும் காட்சி அனுபவத்தில் பொருத்தம் என்பது கண்ணிற்கு இனிமை தரக்கூடிய பொருட்களே ஆகும். இது பார்வையாளரை ஈடுபடுத்தி காட்சி அனுபவத்தில் ஒரு சமநிலையை உருவாக்குகிறது.

FP5EE1

## செயல்பாடு – 2

சிவப்பு மற்றும் மஞ்சள் வண்ணப் பென்சிலைக் கொண்டு இரண்டு வட்டங்களை தனித்தனியாக நிரப்பவும். மூன்றாவது வட்டத்தில் இரண்டு நிறங்களையும் ஒன்றாக வரைந்து ஏற்படும் நிற மாற்றத்தை கவனிக்கவும்.

சிவப்பு மற்றும் நீல வண்ணப் பென்சிலைக் கொண்டு இரண்டு வட்டங்களை தனித்தனியாக நிரப்பவும் மூன்றாவது வட்டத்தில் இரண்டு நிறங்களையும் சமவிகிதத்தில் நிரப்பவும் **(விடை; நிறங்களின் வகைகள் –பிராங் வண்ணச் சக்கரம் – இரண்டாம் வகை நிறங்கள்)**

1. சிவப்பு + மஞ்சள் = ?

 \+ =

2. சிவப்பு + நீலம் = ?

 \+ =

நிறப்பொருத்தங்கள் காட்சி ஆர்வத்தையும் ஒழுங்குணர்வையும் ஏற்படுத்துகிறது. இவை சார்புள்ள நிறப்பொருத்தம், சார்பற்ற நிறப்பொருத்தம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. **சார்புள்ள நிறப்பொருத்தம்:** ஒரே மாதிரி உள்ள நிறங்கள் உபயோகிப்பதால் சார்புள்ள நிறப் பொருத்தம் கிடைக்கிறது. அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை தனி நிறப்பொருத்தம் மற்றும் அருகாமை நிறப்பொருத்தமாகும்.

i. **தனிநிறப்பொருத்தம்**

அ. இதை ஒரு நிறப் பொருத்தம் என்றும் கூறலாம். ஒரே நிறத்தின் இளநிறம், நிறமறைவு, அடர்வு கொண்டுள்ளது. எ.கா. மஞ்சள்.



XII Std - Home Science TM_Unit 5.indd 165 20-04-2020 2.15.03 PM

ஆ. தனிநிறப்பொருத்தத்தில் அழகான விளைவினைப் பெற வேறுபட்ட தன்மையுடைய பொருட்களை பயன்படுத்த வேண்டும்.

இ. நடுநிலை நிறங்களான வெள்ளை, கருப்பு, மற்றும் சாம்பல் நிறங்களையும் நிறப்பொருத்தத்தில் இணைத்துக்கொள்ளலாம்.

ஈ. மற்ற நிறப்பொருத்தங்களுடன் ஒப்பிடும் போது இது மிக குறைந்த விளைவையே ஏற்படுத்தும்.



ii. **அருகாமை நிறப்பொருத்தம்**

அ. பிராங் வண்ணச் சக்கரத்தில் அருகருகே அமைந்திருக்கும் இரு நிறங்களைக் கொண்டது.

ஆ. தனி நிறப் பொருத்தத்தைவிட அதிக வேறுபாடுகள் உள்ளதால் இவை ஆர்வத்தைத் தூண்டுகிறது.

இ. நிறங்கள் வேறுபட்ட மதிப்புடனும், அடர்வுடனும் காணப்படும். உதாரணமாக சிவப்பு, சிவப்பு ஆரஞ்சு, ஆரஞ்சு

ஈ. ஒரு நிறத்தைப் பிரதானமாக பயன்படுத்தி மற்ற நிறங்களைக் கொண்டு அவ்விடத்தை வளப்படுத்தலாம்.

உ. இவ்வகை கலைநயம் மிகுந்த வேலைப்பாடுகளில்பயன்படுகிறது.



**மஞ்சள் பச்சை மற்றும் பச்சை ஆரஞ்சு, மஞ்சள் ஆரஞ்சு, மஞ்சள்**

2. **சார்பற்ற நிறப்பொருத்தம்:** வண்ணச் சக்கரத்தில் எதிரே உள்ள இரண்டு நிறங்களைச் சேர்க்கும் போது இப்பொருத்தம் கிடைக்கிறது. அதில் வெப்ப மற்றும் குளிர் நிறங்கள் இருப்பதால் தூண்டக்கூடியதாகவும், சமச்சீர் உடையதாகவும் இருக்கும்.

i) **எதிர் நிறப்பொருத்தம்**

அ. வண்ணச் சக்கரத்தில் நேர் எதிரே உள்ள இரண்டு நிறங்களைச் சேர்க்கும் போது இவ்வகைப் பொருத்தம் ஏற்படுகிறது. உதாரணமாக மஞ்சள் மற்றும் ஊதா, நீலம் மற்றும் ஆரஞ்சு.

ஆ. இவ்வகையில் ஒரு நிறம் பிரதானமாகவும் மற்றொரு நிறம் துணை நிறமாகவும் பயன்படுகிறது.

இ. எதிர்நிறப் பொருத்தத்தில் ஒரு வெப்ப நிறமும் மற்றும் ஒரு குளிர் நிறமும் பயன்படுத்தப்படுகிறது.

ஈ. முற்றிலும் மாறுபட்ட நிறத்தை பெற்று இருப்பதால் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடியதாக இருக்கும்.



XII Std - Home Science TM_Unit 5.indd 166 20-04-2020 2.15.04 PM



ii. **இரு எதிர் நிறப்பொருத்தம்**

அ. பிராங் வண்ணச் சக்கரத்தில் அருகருகே இரண்டு நிறங்களும் அதன் எதிர் நிறங்களும் சேர்வதனால் இந்தப் பொருத்தம் ஏற்படுகிறது. உதாரணமாக மஞ்சள், மஞ்சள் பச்சை, ஊதா மற்றும் சிவப்பு ஊதா.

ஆ. இதில் ஒரு நிறம் மட்டுமே பிரதானமாகவும் மற்றவை துணை நிறங்களாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இ. வெப்ப மற்றும் குளிர் நிறங்களைப் பயன்படுத்தும் போது அதிக கவனம் தேவை.



iii) **பிரிந்த எதிர்நிறப்பொருத்தம்:** முதன்மை நிறம், அதற்கு நேர் எதிராக இருக்கும் நிறத்தின் இரு பக்கங்களில் உள்ள நிறங்களை ஒன்று சேர்ப்பதால் இப்பொருத்தம் ஏற்படுகிறது. உதாரணமாக மஞ்சள், நீல ஊதா மற்றும் சிவப்பு ஊதா.

மாறுபட்ட நிறங்கள் இணைவதால் அதிக கவனத்தை ஈர்க்கிறது.



iv) **மூவர்ண நிறப்பொருத்தம்**

அ. வண்ணச் சக்கரத்தில் சம இடைவெளியில் உள்ள மூன்று நிறங்களை இணைப்பதால் உண்டாகிறது.

ஆ. நிறத்தின் பல்வேறுபட்ட அடர்வுகளை சேர்க்க வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் அதிக தரம் வாய்ந்த நிறப்பொருத்தமாக அமையும்.

இ. மிக அழகான மூவர்ண நிறப்பொருத்ததை பெற சமநிலையை நினைவில் கொள்ள வேண்டும்.

ஈ. இதில் இருந்து நான்கு மூவர்ண நிறப்பொருத்தம் கிடைக்கிறது. அவை முதன்மை, இரண்டாம் மற்றும் இரண்டு இடைப்பட்ட மூவர்ண பொருத்தம் ஆகும்.

முதன்மை மூவர்ண நிறப்பொருத்தம் – மஞ்சள், நீலம் மற்றும் சிவப்பு

இரண்டாம் மூவர்ண நிறப்பொருத்தம் – பச்சை, ஆரஞ்சு, ஊதா


XII Std - Home Science TM_Unit 5.indd 167 20-04-2020 2.15.04 PM

இடைப்பட்ட வகை மூவர்ண நிறப்பொருத்தம் – (அ) நீலம் பச்சை, சிவப்பு ஊதா மற்றும் மஞ்சள் ஆரஞ்சு, (ஆ) மஞ்சள் பச்சை, நீல ஊதா மற்றும் சிவப்பு ஆரஞ்சு




v) **நான்கு வண்ண நிறப்பொருத்தம்**

அ. வண்ணச் சக்கரத்தில் தொலைவில் உள்ள நான்கு நிறங்களைப் பயன்படுத்துவதால் இப்பொருத்தம் ஏற்படுகிறது. உதாரணமாக பச்சை, மஞ்சள் ஆரஞ்சு, சிவப்பு மற்றும் நீல ஊதா.

ஆ. ஒரு நிறம் மட்டுமே பிரதாணமாக பயன்படுத்தப்பட்டால் இவ்வகை நிறப்பொருத்தம் அழகாக இருக்கும்.

இ. வெப்ப மற்றும் குளிர் நிறங்களைப் பயன்படுத்தும் போது அதிக கவனம் தேவை.



## செயல்பாடு – 3

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | அருகாமை நிறப்பொருத்தம் | சம தொலைவில் இருக்கும் மூன்று வண்ணங்கள். |
| 2 | தனிநிறப் பொருத்தம் | நேர் எதிரே உள்ள நிறங்கள் |
| 3 | எதிர் நிறப்பொருத்தம் | அருகருகே அமைந்துள்ள நிறங்கள் |
| 4 | இரு எதிர் நிறப்பொருத்தம் | முதன்மை நிறம், அதற்கு நேர் எதிராக இருக்கும் நிறத்தின் இரு பக்கங்களில் உள்ள நிறங்கள் |
| 5 | பிரிந்த எதிர்நிறப் பொருத்தம் | அருகருகே அமைந்துள்ள இரண்டு நிறங்களும் அதன் எதிர் நிறமும். |
| 6 | மூவர்ண நிறப்பொருத்தம் | சமதூரத்தில் இருக்கும் நான்கு நிறங்கள் |
| | நூல் வண்ண நிறப்பொருத்தம் | ஒரு நிறம் |

### 5.7.4 நிறப் பொருத்தங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய கருத்துக்கள்

நிறப்பொருத்தங்களை பயன்படுத்தி செய்யப்படும் உள்அலங்காரத்தின் போது



XII Std - Home Science TM_Unit 5.indd 168 20-04-2020 2.15.04 PM

மனதில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் பின்வருமாறு

- எதிர்பார்க்கும் பயன், அறையின் அளவு, உருவம் மற்றும் திசை.
- அறையில் உருவாக்க வேண்டிய மனநிலை, உதாரணம்: ஆண்மை, பெண்மை, பாரம்பரியம், சமநிலை மற்றும் பல.
- குடும்பத்தின் தனி நபர் விருப்பம்.
- ஒவ்வொரு அறையிலும் நடக்கவிருக்கும் செயல்கள்.
- வீட்டில் இருக்கும் அறைகலன்களின் நிறம்.
- ஒரு நிறம் மட்டும் பிரதான வர்ணமாக இருக்க வேண்டும்.
- முதன்மை நிறம் 60- 70 சதவீதமும், இரண்டாவது நிறம் குறைவாகவும் மூன்றாவது நிறம் மிக குறைவாகவும் பயன்படுத்த வேண்டும்.
- பெரிய இடத்திற்கு வெளிரிய நிறமும், சிறிய இடத்திற்கு பிரகாசமான நிறமும் பயன்படுத்த வேண்டும். என்ற இட அளவு விதியை பின்பற்ற வேண்டும்.
- தற்போது உள்ள நிலை மற்றும் நவநாகரீகம் போன்றவற்றையும் மனதில் கொள்ள வேண்டும்.

## 5.8 மலர் அலங்காரம்

மனிதகுலத்துக்கு கிடைத்த இயற்கையின் பரிசு மலர்கள். மலர் அலங்காரம் என்பது மலர்கள் மற்றும் தாவரப் பகுதிகளை கலைநயத்துடன் பொருத்தமான, தன்மை, தொட்டுணர்வு மற்றும் நிறம் கொண்டு ஒருங்கிணைப்பதாகும். மலர்கள் எந்த ஒரு அறையையும் பிரகாசமாக்குவதுடன் ஆர்வத்தையும் வேறுபாட்டையும் ஏற்படுத்துகிறது. மலர் அலங்காரமானது பல்வேறு இடங்களான மேஜை, ஜன்னல் திட்டு, சுவர் மற்றும் மூலைகளில் இடத்துக்கும் சமயத்துக்கும் ஏற்றவாறு அமைக்கப்படுகிறது.

### 5.8.1 மலர் அலங்காரத்திற்கு பயன்படும் பொருட்கள்

மலர் அலங்காரம் செய்வதற்கு தேவையான அடிப்படை மூன்று பொருட்கள்

1. மலர்கள், தழைகள், பழங்கள், மற்றும் சிறு பழங்கள்
2. ஜாடி/ கிண்ணங்கள்
3. தண்டு தாங்கிகள் (stem holders), கத்தி, கத்தரிக்கோல், கம்பி (wire)

**அ) மலர்கள், தழைகள், பழங்கள் மற்றும் பெரிகள்**

எல்லா விதமான மலர்கள், தழைகள் புதிய (அ) காய்ந்த (அ) செயற்கையானவைகள் இக்கலையில் பயன்படுத்தலாம்.

மலர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பதப்படுத்துதல்

1. மலர்களை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ பறிக்க வேண்டும்.
2. நன்கு மலர்ந்த மலர்களைப் பறிப்பதை விட மொட்டாக இருப்பதையும் புதியதாக மலரப்போகும் மலர்களையும் பறிக்க வேண்டும். மலர்ந்த மலர்கள் சீக்கிரமாக வாடிவிடும்.
3. மலரின் காம்புகளைக் கையால் உடைக்க கூடாது. கத்திரி, அல்லது கூர்மையான கத்தி (அ) கத்திரிக்கோல் கொண்டு சாய்வாக வெட்ட வேண்டும். காம்பு நீளமானதாக இருக்க வேண்டும்.
4. வெட்டப்பட்ட காம்பு பாகம் நீரில் மூழ்கியிருக்குமாறு வைக்க வேண்டும். மலர்களின் இதழ்கள் மட்டும் வெளியே தெரியும்படி வைக்க வேண்டும்.
5. காம்பின் அடிப்பகுதியிலுள்ள இலைகளை நீக்கிவிட வேண்டும்.
6. மலர்களைக் காகிதத்திலோ அல்லது அகலமான வாழை இலையிலோ சுற்றி அதிக வெளிச்சம் இல்லாத இடத்தில் வைக்க வேண்டும். உடனடியாக

பயன்படுத்தவில்லை. எனில் நீருள்ள வாளியில் வைக்க வேண்டும். பிளாஸ்டிக் பைகளிலும் மலர்களைப் வைக்கலாம்.

7. மலர்க்கிண்ணங்களில் நீரைத் தினமும் மாற்ற வேண்டும். அதில் சிறிதளவு உப்பு (அ) சர்க்கரை போடும் போது மலர்கள் நீண்ட நேரம் வாடாமல் இருக்கும்.

### ஆ) ஜாடி/ கிண்ணங்களை தேர்ந்தெடுத்தல்

ஜாடி/ கிண்ணங்களின் முக்கிய வேலையானது மலர் மற்றும் தழைகளைத் தாங்கி நிற்பதாகும். மலர் அலங்காரத்துக்கு கிண்ணங்களானது துணைக் கருவியாக விளங்குகிறது. இது சரியான அளவிலும், உருவத்திலும், நிறத்திலும் மற்றும் பொருளிலும் இருத்தல் அவசியம்.

ஜாடி / கிண்ணங்களின் வகைகள்

- ஜாடிகள், கவர்ச்சியான குவளைகள், டப்பாக்கள்
- உயரமான உருளைகள், குறுகலான கழுத்துடைய ஜாடிகள், தட்டை வட்டமான தட்டுகள், ஆழமான தட்டுகள், தாழ்வான வட்ட கிண்ணங்கள்
- பல்வேறு நிறத்தாலான குவளைகள்
- மரக்கட்டைகள் (அ) மூங்கில் கூரைகள்
- வீட்டில் பயன்படும் பானைகள், பாத்திரங்கள், டம்ளர்கள், ஆழம் குறைந்த கிண்ணங்கள்.

### இ) மலர்ச்சொருகிகள்

மலர்ச்செருகிகள் கூர்மையான முனைகள் கொண்டதாக இருப்பதால் காம்புகள் அவற்றைப் பற்றிக் கொண்டு நிற்கும் இதற்கு ஊசி முனைச் சொருகி என்பது பெயர். இதைத் தவிர கம்பிகள், உடைந்த சருகுகள் போன்றவையும் சொருகிகளைப் போலப் பயன்படுகின்றன. மலர்ச்சொருகிகள், மலர்களின் பாரத்தினால் சாய்ந்து விடாதபடி கனமுள்ளவையாகவும், எப்படிப்பட்ட காம்பும் பொருந்தும் வண்ணம் வளைந்து கொடுக்கக் கூடியனவாகவும் இருக்க வேண்டும்.

இது துருப்பிடிக்காததாக இருத்தல் வேண்டும். மலர்ச் சொருகிகளைக் களிமண் அல்லது மெழுகு கொண்டு பாத்திரத்தின் அடிதளத்தில் பிணைத்து விடலாம். இப்பிணைப்பு உறுதியாக இருக்கச் சொருகியும் பாத்திரமும் உலர்ந்திருக்கும் பொழுது இரண்டையும் பிணைக்க வேண்டும். பெரிய மலர்கள், இலைகள் இவற்றை மலர் அலங்காரத்தின் அடிப்பாகத்தில் அமைத்துச் சொருகிகளை மறைத்து விடலாம். ஒயோசிஸ் என்பது(wet floral foam) முத்திரைப் பெயராகும், பஞ்சு போன்ற பீனோலிக் நுரையானது உண்மையான மலர் அலங்காரத்துக்கு பயன்படுகிறது. இந்து நுரையானது (foam) பஞ்சு போன்று நீரை உறிஞ்சி நீண்ட நேரத்துக்கு மலர்களை வாடாமல் பாதுகாத்து ஆதரவுடன் நிற்கச் செய்யும்.

### 5.8.2 மலர் அலங்கார அமைப்புகள்:

1. **பாரம்பரிய அமைப்பு:** அனைத்துவிதமான மலர்கள், நிறம், அளவு மற்றும் தன்மை கொண்டவைகளை ஒன்றாக அடுக்கி வைக்கப்படுகிறது. இது பலதரப்பட்ட வண்ணங்கள் கொண்ட தொகுதி அமைப்பாகக் காணப்படும்.

2. **அடிப்படை அமைப்பு/ இக்கிபானா அமைப்பு:** இக்கிபானா என்பது ஜப்பானிய முறை மலர் அலங்காரமாகும். இதன் பொருள் 'வாழும் மலர்கள்' ஆகும். இக்கிபானா இரண்டு வகைப்படும் மொரிபானா (moribana) சிறிய ஜாடி அமைப்பு மற்றும் நஜிரே (nageira) பெரிய ஜாடி அமைப்பு. இது இயற்கையாக செடி வளரும் பிம்பத்தை ஏற்படுத்தும். மலர்களை தண்டுகளுடன் அடுக்குவதன் மூலம் கவர்ச்சியான கோடுகளின் அமைப்பை (pattern) ஏற்படுத்த முடியும். மலர்களை அதற்கேற்றாற் போல் வைக்கும் போது



XII Std - Home Science TM_Unit 5.indd 170 20-04-2020 2.15.04 PM

ஒரு சமநிலையை உருவாக்க இயலும். எப்பொழுதும் மலர்களானது ஒற்றை இலக்க எண்களாக மூன்று, ஐந்து, ஏழு (அ) பதினொன்று என்ற கணக்கில் இருக்கும். ஜப்பானிய அடிப்படை அமைப்பானது பொதுவாக வெவ்வேறு நிலைகளில் மூன்று கொள்கைகளை பின்பற்றக் கூடியது. **உயரத்தில்** உள்ள மலர் சொர்க்கத்தையும், **நடுவில்** உள்ள மலர் மனிதனையும் மற்றும் **கீழே** உள்ள மலர் பூமியையும் குறிக்கும்.

- சொர்க்கம் – ஜாடியைவிட உயரத்திலோ (அ) அகலத்திலோ 1½ மடங்கு முதல் 2 மடங்குகள் அதிகமாக இருத்தல் வேண்டும்.
- மனிதன் – சொர்க்கத்தின் உயரத்தில் ¾ பங்கு இருத்தல் வேண்டும்.
- பூமி – மனிதன் உயரத்தில் ½ பங்கு இருத்தல் வேண்டும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கிளைகள் மற்றும் கென்சான் (kenzan) (அ) முள் முனை கொண்ட உலோக சொருகியை எளிய படமாக வரைவது ககைசு (kakaizee) எனப்படும். தற்போது உள்ள நான்கு முக்கிய மலர் அலங்கார வகைகளானது 1) ரிக்கா (rikka) நிற்கும் மலர்கள் 2) நகரி (nagarie) அனைத்து மலர்களையும் கலவையாக அலங்கரிப்பது 3) மொரிபானா (moribana) மலர்களின் தொகுப்பு 4) ஷோகாய் (shokai) உற்சாகமூட்டக்கூடிய கவர்ச்சிகர மலர் அலங்கரிப்பு.

3. **நவீன அமைப்பு:** பாரம்பரிய மற்றும் கிழக்கிந்திய அமைப்பை ஒத்த வகையில் உருவாக்குவது.

4. **மிதக்கும் அமைப்பு:** இது சிறிய காம்புடைய மலர்களை வைத்து தாழ்வான கிண்ணம் மற்றும் தட்டுகளில் உருவாக்கும் அமைப்பு ஆகும். பெரிய பளிச்சென்று இருக்கும் மலர்கள் நடுவிலும், சிறிய மலர்கள் அதைச் சுற்றியும் அமைக்கப்பட்டால் அழகாக இருக்கும். மலர்கள் முழுவதுமான நீரில் மூழ்குமாறு இருத்தல் கூடாது.

மலர்களை அடுக்கும் போது நினைவில் கொள்ள வேண்டியவை

i. மலர் அலங்கரிப்பு குறித்த கருத்து வடிவம் இருத்தல் வேண்டும்.


ii. மலர்களை முதலில் அடுக்கிவிட்டும், பின் இலைகள் மற்றும் கிளைகள் அடுக்க வேண்டும்.

iii. பெரிய பிரகாசமான மலர்கள் கீழும் மற்றும் சிறிய நிறம் குறைந்த மலர்கள் உயரத்திலும் வைக்க வேண்டும்.



Ikebana

ஆதாரம்: Sogetsukai Foundation




ககைசு மொரிபான



(வரிசையுடன் அடுக்கப்பட்ட மலர்கள்



XII Std - Home Science TM_Unit 5.indd 171
20-04-2020 2.15.05 PM

iv. முதலில் மத்திய பகுதியில் மலர்களை அலங்கரித்தப்பின் ஒவ்வொரு பகுதியாக அலங்காரத்தை முடித்தல் வேண்டும்.

v. ஜாடியில் தேவையான அளவு நீரை நிரப்பி தண்டுகளை மூழ்குமாறு வைத்தல் வேண்டும்.

vi. உப்பு, சர்க்கரை (அ) அதற்கேற்ற பதப்படுத்தும் பொருள் சேர்த்து மலர்கள் புத்துணர்ச்சியுடன் வெகுநேரம் நீடிக்கச் செய்யலாம்.

vii. அனைவரும் பார்த்து மகிழும் இடத்தில் மலர் அலங்காரத்தை வைத்தல் வேண்டும். தக்க துணை பொருட்களை அதனுடன் சேர்த்து வைத்தல் அழகு தரும்.

viii. ஆழகுணர்ச்சியை ஏற்படுத்த அனைத்து வடிவத்தின் கொள்கைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

### 5.8.3 மலர் அமைப்புகளின் வகைகள்

i. **குழு அமைப்பு:** அனைத்து வகையான மலர்களை ஒன்றாக அமைப்பது. நிறம், அளவு மற்றும் புறத்தோற்றத் தன்மை கொண்ட வெவ்வேறு மலர்களை ஒருங்கிணைந்து ஒரு மலர் கிண்ணத்தில் வைப்பதாகும்.

ii. **வரிசை அமைப்பு:** இந்த வகையான அமைப்பு எளிமையான, அழகான, அர்த்தமுள்ள மற்றும் இயற்கையான அமைப்பாகும், இந்த அமைப்பு இயற்கையில் வளரும் செடியின் தோற்றத்தைத் தருகிறது. வெவ்வேறு நிலைகளில் ஒற்றை எண் வரிசையால் மலர்கள் பயன்படுத்தப்படுகிறது.

iii. **ஒருங்கிணைந்த அமைப்பு:** வரிசை மற்றும் குழு அமைப்பின் ஒருங்கிணைப்பாக இருக்கும். மேலும் வடிவியல் வடிவங்களாகிய கூம்பு, பிறைவடிவம், வட்டம், முக்கோணம் L வடிவம் போன்று அலங்கரிப்பதாகும்.

iv. **இலை அமைப்பு:** இலைகள் மற்றும் கிளைகள் இவற்றைக் கொண்டு அமைக்கப்படுபவை இலை அமைப்பு ஆகும். (எ.கா.) பெரணிகள், குரோட்டன், கல்வாழை, முள்செடி, கள்ளிவகைகள் போன்றவற்றை நம் கற்பனைக்கேற்றாற் போல் அழகுற அமைக்கலாம்.

v. **சிறிய அளவிலான அமைப்பு:** இது சிறிய அமைப்பாகும். நான்கு அங்குலம் உயரம் வரை இருக்கும். சிறிய கிண்ணம், முட்டை ஓடுகள், சிறிய பாட்டில்கள், மூடிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அலங்கரிக்கலாம்.

## மலர் அமைப்பு


குழு அமைப்பு


வரிசை அமைப்பு


L–வடிவ அமைப்பு


பிறை வடிவ அமைப்பு


இலை அமைப்பு


ஒருங்கிணைந்த அமைப்பு


உலர் அமைப்பு




XII Std - Home Science TM_Unit 5.indd 172 20-04-2020 2.15.06 PM

vi. **உலர் அமைப்பு:** மழைக்காலங்களிலும் குறைந்த அளவு மலர் கிடைக்கும் நேரங்களிலும், இம்மாதிரியான அமைப்பு உகந்தது. பழங்கள், காய்கறிகள், விதைகொத்துகள், காயந்த கிளைகள், நீல புல்வகைகள், வேர்கள், காய்ந்த மரப்பட்டை, பனையின் மலர் கூட்டம் போன்றவைகள் அழகான தோற்றத்தைக் கொடுக்கும். மயிலிறகுகளை ஒரு பாத்திரத்தில் அழகுற அமைக்கும் போது பார்ப்போர் கவனத்தை ஈர்க்கிறது. மரத்தாலான உலர் அமைப்புகளில் வெள்ளி, வெள்ளை (அ) தங்க நிறங்களில் வர்ணம் தீட்டும்போது பார்க்க அழகாக இருக்கும்.

## 5.9 தரை அலங்காரம்

தரை அலங்காரம் என்பது இந்தியாவின் மிக உயர்ந்த கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. அழகான நிறம், மகிழ்ச்சி, சந்தோசம் ஆகியவற்றை அளிக்கவல்லது. பல்வேறு வகையான தரை அலங்காரங்களாவன

1. **கோலம்:** கோலம் என்பது கையினால் பலவித வடிவங்களைக் கற்பனை செய்து வரைவதாகும். இதுபுள்ளிக்கோலமாகவோ அல்லது இழைக் கோலமாகவோ இருக்கலாம். வெள்ளைக்கல் (அ) சுண்ணக்கட்டி, எனாமல் வர்ணம், வெள்ளை (அ) பல வண்ண மணல், உப்பு, நிறப்பொடி, அரிசி மாவு நிறக்கலவை போன்றவை கோலமிடப் பயன்படுகிறது. செம்மண் கரைசல் கோலத்தின் அழகை மேம்படுத்த உதவுகிறது. கிராமப் பகுதிகளில், பெண்கள் மாட்டுச் சாணத்தை நீரில் கரைத்து தெளித்து அதன் மேல் கோலமிடுவர்.
2. **ரங்கோலி:** வண்ணப் பொடிகளை கோலமாவுடனோ, உப்புடனோ (அ) மணலுடனோ கலந்து உபயோகிக்கலாம்.
3. **அல்பனா:** இக்கோலம் வெள்ளை வர்ணத்தினால் வரையப்படும் பழங்கால வங்காளக் கலையாகும். துத்தநாக ஆக்ஸைடுடன் பிசின் சேர்க்கும் போது அதிக நாட்களுக்கு அப்படியே இருக்கும்.
4. **மலர் விரிப்பு:** பல வண்ண மலர்கள், இதழ்கள், இலைகள் போன்றவற்றை வடிவத்தின் மீது அழகாக அமைக்கலாம். ஈர மணலைக் கீழே சமமாகப் போட்டு அதன் மேலே கோலத்தைப் போடுவதால் இம்மலர் விரிப்பானது மேலெழும்பி இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.

1


2


3


4


## பாடசுருக்கம்

- வீடு என்பது தரைகள், சுவர்கள், ஜன்னல்கள், கூரை ஆகியவற்றினால் ஆன தங்குமிடம் ஆகும். இதில் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக வாழவும், அவர்களின் வாழ்வின் பெரும்பகுதியை செலவிடும் இடமாகவும் உள்ளது.
- குடியிருப்பு கட்டிடங்கள் ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை தனிவீடு, பகுதியாக பிரிக்கப்பட்டு வீடு, வரிசை வீடுகள், அடுக்குமாடி வீடுகள், வானளாவிய அடுக்குமாடி வீடுகள்.
- மனைக்கான இடம் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் இயற்கை அமைப்புகள், மண்ணின் தன்மை, சுகாதார வசதிகள், நடைமுறை வசதிகள், சுற்றுப்புறத்தன்மை, சட்ட நுணுக்கங்கள் ஆகியவை ஆகும்.
- மனையமைப்புத் திட்டம் தீட்டும் போது கவனிக்க வேண்டிய அம்சங்களாவன வெளியமைப்பு, முகப்புத் தோற்றம், மறைவு அறையின் கூட்டமைப்பு, இடச்சிக்கனம், செல்லும்வழி, தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளுதல், சுகாதாரம் தட்டுமுட்டுச் சாமான்கள் இருக்கை வசதிகள், நடைமுறைக் கவனங்கள் ஆகியவை ஆகும்.
- ஒரு நல்ல வடிவம் என்பது தகுந்த பொருட்களை கொண்டு சரியாக அமைப்பதும் முடித்த பிறகு அழகுணர்ச்சியை உருவாக்குவதுமாக இருக்கும்.
- வடிவம் என்பது அளவு, தன்மை, நிறம், புறத்தோற்றத்தன்மை போன்றவற்றின் ஒழுங்கான அமைப்பாகும். அலங்கார வடிவமைப்பு என்பது செறிவூட்டபெற்ற கட்டமைப்பு வடிவமைப்பு ஆகும். இது வடிவத்திற்கு ஆடம்பர தன்மையை தருகிறது.
- கலை மூலப்பொருட்களாவன கோடு, வடிவம், தன்மை, புறத்தோற்ற தன்மை இடம் மற்றும் நிறம்.
- கோடு என்பது அடிப்படை மூலப்பொருளாகும். புள்ளிகள் பல இணைந்து இரு உருவளவையை உண்டாகும்.
- வடிவம் என்பது கோடுகளினால் சுழப்பட்ட பரப்பே ஆகும். வடிவம் என்பது தட்டையான மற்றும் இரு உருவளவையை உடையது. அடிப்படை வடிவங்களாவன செவ்வகம், சதுரம் முக்கோணம் மற்றும் வட்டம்.
- தன்மை மற்றும் மூன்று காட்சி பரிமாணத்தின் கூட்டு ஆகும். இது உயரம் / நீளம் மற்றும் அகலம் தன்மை என்பது உண்மையான ஆழம் அல்லது மாயையை உண்டுபண்ணும். அடிப்படை தன்மைகளாவன கோளம், கனசதுரம், கூம்பு ஆகியவை ஆகும்.
- புறத்தோற்ற தன்மை என்பது ஒரு பொருளின் மேற்பரப்பை தொட்டுணருவதன் மூலமும் பார்ப்பதன் மூலமும் கண்டறியப்படுகிறது.
- பொருத்தம், சமநிலை, சரியமைப்பு, இணைப்பு, அழுத்திக்காட்டல் ஆகியவை வடிவத்தின் நியதிகள் ஆகும்.
- சரியமைப்பு என்பது ஒன்றொடு ஒன்று (அ) மொத்த அளவு (அ) பரப்பிற்கு இடைப்பட்ட தொடர்பை குறிப்பதாகும்.
- கிரேக்க செவ்வக (Greek Oblong) விகுதப்படி ஒரு தளத்தை பிரித்தால் நல்ல சரியமைப்பு கிடைக்கிறது. கிரேக்க செவ்வகம் என்பது 2:3 என்ற விகித சமதளத்தையும் 5:7:11 என்ற விகிதத்தில் கனபரிமாணத்தையும் பிரிப்பதாகும்.
- ஒரே அளவு கவர்ந்திழுக்கும் தன்மையுடைய பொருட்களை மையத்தின் இரண்டு பக்கங்களில் வைப்பதன் மூலம் சமநிலை பெறப்படுகிறது. இணைப்பு



XII Std - Home Science TM_Unit 5.indd 174 20-04-2020 2.15.08 PM

என்பது ஒரே தொடர்ச்சியான இயக்கத்தை குறிக்கிறது. அழுத்திக்காட்டல் என்பது ஒரு அமைப்பின் மிக முக்கியமான பகுதிக்கு பார்வை சென்று பின்பு அந்த அமைப்பின் மற்ற பகுதிகளுக்கு அதன் முக்கியத்தின் படி அடுத்தடுத்து செல்வதாகும்.

- அடிப்படை நிறங்களான சிவப்பு (R) நீலம் (B) மஞ்சள் (Y) ஆகியவற்றை வெவ்வேறு அளவுகளில் சேர்ப்பதினால் பல நிறங்கள் உண்டாகின்றன. இவை முதன்மை நிறங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் மற்ற நிறங்களின் மூலப்பொருளாகிறது மற்றும் இந்த முதன்மை நிறங்களை மற்றைய நிறச் சேர்க்கையினால் உண்டாக்க முடியாது.
- இரண்டு முதன்மை நிறங்களை சமஅளவு கலந்தால் இரண்டாம் வகை நிறங்கள் உண்டாகிறது. முதண்மை நிறத்தையும் அதன் அருகிலுள்ள இரண்டாம் வகை நிறத்தையும் சமமாகக் கலந்தால் ஆறு இடைத்தரப்பட்ட நிறம் உண்டாகும். அவை மஞ்சள்பச்சை, நீலப்பச்சை, நீலஊதா, சிவப்புஊதா, சிவப்பு ஆரஞ்சு மற்றும் மஞ்சள் ஆரஞ்சு.
- இரண்டு, இரண்டாம் வகை நிறங்களை சேர்க்கும் போது நான்காம் வகை நிறம் கிடைக்கிறது. இரண்டு நான்காம் வகை நிறங்களை சேர்க்கும் போது மூன்று ஐந்தாம் வகை நிறங்கள் பெறப்படுகிறது.
- ஆழ்ந்த வெப்பநிறங்கள் பொருட்களின் அளவை பெரிதாக்கு அருகில் இருப்பது போன்ற உணர்வினை கொடுக்கும். வெளிர் நிறங்கள் பொருட்களின் அளவைக் குறைத்து, தூரத்தில் இருப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்தும்.
- ஒரே மாதிரி உள்ள நிறங்களை உபயோகிப்பதால் சார்புள்ள நிறப்பொருத்தம் கிடைக்கிறது. தனிநிறம் பொருத்தம் என்பதை ஒரு நிறப் பொருத்தம் என்றும் கூறலாம். ஒரே நிறத்தைப் பல மதிப்பீட்டின் மூலம் வேறுபடுத்தி உபயோகப்படுத்தும் போது இப்பொருத்தம் கிடைக்கிறது. அருகாமை நிறப்பொருத்தம் ப்ராங் வண்ணச் சக்கரத்தில் அருகருகே அமைந்திருக்கும் இரு நிறங்களை பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது.
- எதிர் நிறப்பொருத்தத்தில் நேர் எதிரே உள்ள இரண்டு நிறங்களை சேர்க்கும் போது இப்பொருத்தம் கிடைக்கிறது. இல் சமநிலை மிகவும் முக்கியக் ஏனெனில் வெப்ப நிறங்கள் மற்றும் குளிர் நிறங்களும் இரண்டுமே பயன்படுத்தப்படுகிறது. வண்ணச் சக்கரத்தில் அருகே இரண்டு நிறங்களும் அதன் எதிர்நிறங்களும் சேர்வதினால் இப்பொருத்தம் ஏற்படுகிறது.
- பிரித்த எதிர் நிறப்பொருத்தத்தில் முதன்மை நிறம் (அ) இடைப்பட்ட நிறம், அதற்கு நேர் எதிராக உள்ள நிறத்தின் இரு பக்கங்களிலும் இருக்கும் நிறங்களும் ஒன்று சேர்வதால் இப்பொருத்தம் எற்படுகிறது மூவர்ண நிறப்பொருத்தமானது வண்ணச் சக்கரத்தில் சம இடைவெளியில் உள்ள மூன்று வண்ணங்களால் ஆனது. வண்ணச் சக்கரத்தில் சமதூரத்திலிருக்கும் நான்கு நிறங்களாப் பயன்படுத்துவதால் இப்பொருத்தம் ஏற்படுகிறது.
- மலர் அலங்கார என்பது மலர்களையும், தாவர பகுதிகளை ஒருங்கிணைந்து தன்மை, புறத்தோற்றத்தன்மை நிறம் ஆகியவற்றில் பொருத்தத்தை உண்டாக்கும் கலை ஆகும்.
- தரை அலங்காரம் என்பது இந்திய பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தில் மிக முக்கிய பங்கு வகுக்கிறது. இவ்வகை அலங்காரம் நிறம், மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தை அளிக்கவல்லது. தரை அலங்காரத்தின் வகைகளாவன கோலம், ரங்கோலி அல்பனா, மலர் விரிப்பு ஆகியன ஆகும்.

## A-Z கலைச் சொற்கள்

- பெக் போர்டு (peg Board) சம இடைவெளியில் துளையிடப்பட்ட கடின பலகை துளையில் கொக்கியின் உதவியுடன் கடாய் மற்றும் சாஸ் பான் போன்ற பல பொருட்களை தொங்கவிடலாம்.
- பரண் (Loft) – பொருட்கள் சேமிப்பு இடம்.
- சுவற்றில் கட்டப்பட்ட அலமாரி (Built – in – cupboard) சுவற்றில் பதிக்கப்பட்ட அலமாரிகள்
- எதிர்பொருத்தம் (complementary)
- இளநிறம் (tint) - வெளிறிய தன்மை
- நிறமறைவு (shade) – ஆழ்ந்த தன்மை
- தொட்டுணரக்கூடிய தன்மை (Tactile quality) - தொடுதல் மூலம் அறியப்படுகின்ற புறத்தோற்றத் தன்மை
- ப்லாரஸ்ட் பார்ம் (Florist foam) - மலர் அலங்காரத்தில் பயன்படும் ஒருவித மென்மையான பஞ்சு போன்ற பார்ம்.

## மதிப்பீடு

**I. சரியான விடையை தேர்த்தெடுத்து எழுதுக. 1 மதிப்பெண்**

1. ___________ என்பது வெளியிருந்து ஒரு நபர் வீட்டை பார்க்கும்போது ஏற்படும் உணர்வு ஆகும்.
   அ) அம்சம்
   ஆ) செழிப்பு
   இ) நெகிழ்வுத்தன்மை
   ஈ) குழுவாக

SKR93W

2. வீட்டில் சமையலறையை ___________ மூலையில் வைப்பது நல்லது.
   அ) கிழக்கு
   ஆ) மேற்கு
   இ) வடக்கு
   ஈ) தெற்கு

3. இந்த வடிவமானது வடிவத்துக்கு ஆடம்பரத்தை சேர்க்கும்
   அ) சட்டவடிவம்
   ஆ) அலங்கார வடிவம்
   இ) இயற்கை
   ஈ) கலைநயம்

4. இந்த ___________ கோடானது உறுதித் தன்மையையும், தொடர்ச்சியையும், மேன்மையையும், ஆன்மீக உணர்வையும் மற்றும் செயல்பாட்டையும் குறிக்கிறது.
   அ) இடைமட்ட
   ஆ) செங்குத்து
   இ) சாய்ந்த
   ஈ) வளைந்த

5. வடிவங்களின் உருவமானது நாகரிகமாகவோ (அ) எளிமையான இயற்கை வடிவங்களாக காட்சியளிக்கிறது.
   அ) நவீன
   ஆ) இயற்கை
   இ) ஜியோமிதி
   ஈ) உண்மையான

6. _________சமநிலையானது நுட்மாகவும், இயல்பாகவும் மாறும்தன்மையுடனும் துறுதுறுப்பாகவும் மற்றும் நெகிழும் தன்மையுடன் காணப்படும்.
   அ) முறைசாரா
   ஆ) முறையான
   இ) இருதரப்பு
   ஈ) ஆர



XII Std - Home Science TM_Unit 5.indd 176 20-04-2020 2.15.08 PM

7. ____________என்பது ஒருங்கே அமைக்க பெற்ற தொடர் அசைவு ஆகும்.

அ) தொடர்ந்து நகரும் உணர்வு
ஆ) அழுத்திக்காட்டல்
இ) விகிதம்
ஈ) பொருத்தம்

8. வெள்ளை, கருப்பு மற்றும் சாம்பல் ஆகியவை ___________ நிறங்கள் ஆகும்.

அ) நடுநிலை
ஆ) இரண்டாம் வகை
இ) மூன்றாம் வகை
ஈ) முதன்மை

9. ___________ என்பது நிறத்தினை அதிகரித்தும் குறைத்தும் காட்டுவதை குறிக்கிறது.

அ) நிறம்
ஆ) மதிப்பு
இ) பிராங்
ஈ) அடர்வு

10. இந்த நிறப்பொருத்தமானது ப்ராங் வண்ணச் சக்கரத்தில் நேர் எதிரே உள்ள நிறங்களை குறிக்கிறது.

அ) எதிர் நிறப்பொருத்தம்
ஆ) இரு எதிர் நிறப்பொருத்தம்
இ) பிரிந்து எதிர்நிறப்பொருத்தம்
ஈ) மூவர்ண நிறப்பொருத்தம்

**II சிறு வினாக்கள் (2 மதிப்பெண்கள்)**

1. வீடு- வரையறு
2. வீட்டை உரிமையாக்குதல் என்றால் என்ன?
3. வீடு வாடகை எடுத்தல் என்ன?
4. நாம் வாசிக்கும் அறையில் பயன்படுத்தும் வீட்டு உபயோகப்பொருட்களின் வகைகளை பட்டியலிடு?
5. பல்வேறு வகையான சமையலறை அமைப்புகளை பட்டியலிடுக.
6. வடிவம் என்றால் என்ன?
7. கட்ட வடிவம் என்றால் என்ன?
8. அலங்கார வடிவம் என்றால் என்ன?
9. பல்வேறு வகை கோடுகள் பற்றி எழுதுக?
10. செங்குத்து மற்றும் இடைமட்டக் கோடுகள் எதை வெளிப்படுத்துகிறது.
11. மூன்று பொதுவான உருவங்களின் பெயர்களை எழுதுக.
12. இயற்கையான வடிவங்கள் பொருள் கூறுக.
13. வடிவியல் உருவங்கள் என்றால் என்ன?
14. இயற்கை, வடிவியல் மற்றும் நுண்ணிய வடிவங்களுக்கு உதாரணம் கூறுக.
15. கலையின் மூலப்பொருளான இடம் குறித்து விவரிக்கவும்.
16. இடத்தின் இரண்டு வகைகளை கூறுக.
17. தொடு உணர்வின் இரண்டு வகைகளை எழுதுக.
18. தொட்டு உணரும் திறன் / காட்சி பரிசோதனை விவரி?
19. நிறத்தின் மூன்று பண்புகளை எழுதுக.
20. நிற மதிப்பு- வரையறு.
21. நிறத்தின் அடர்வு – வரையறு.
22. மூன்றாம் நிலை நிறங்கள் எழுதுக.
23. இரண்டு நடுநிலை நிறங்களை எழுதுக.
24. ஏதேனும் இரண்டு மென்மையான நிறங்கள் (light colour) மற்றும் ஆழ்ந்தை நிறங்களை (heavy colours) எழுதுக.
25. இளநிறம் மற்றும் நிறமறைவு ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாது?
26. இரண்டு வெப்ப நிறங்களைக் கூறுக?
27. இரண்டு குளிர்ந்த நிறங்களைக் கூறுக?
28. இடைப்பட்ட நிறங்கள் மற்றும் நான்காம் வகை நிறங்களின் இரு உதாரனம் தருக.
29. பிராங் வண்ணச் சக்கரம் – வரையறு
30. சமநிலையின் வகைகள் யாவை?



XII Std - Home Science TM_Unit 5.indd 177 20-04-2020 2.15.08 PM

31. சீரான சமநிலை என்றால் என்ன?

32. சீரற்ற சமநிலைஎன்றால் என்ன?

33. சரியமைப்பு என்றால் என்ன?

34. பொருத்தம் என்பதன் பொருள் யாது?

35. மலர் அலங்காரம் என்றால் என்ன?

36. தரை அலங்காரம் என்றால் என்ன? இரு உதாரணம் தருக.

**III குறுவினா 3 மதிப்பெண்கள்**

1. வீட்டில் நடைபெறும் செயல்களை அதற்கான இட ஒதுக்கீட்டை எழுதுக.
2. வீட்டில்நடைபெறும்பெரும்பான்மையான வேலைகளை பொருத்து அதற்கான முக்கிய இடங்களை வகைப்படுத்துக.
3. வரவேற்பு அறையை அமைக்கும் போது மனதில் கொள்ள வேண்டிய குறிப்புகள் யாவை
4. கட்டிட வடிவமைப்பின் அம்சங்கள் யாவை?
5. அலங்கார வடிவமைப்பின் அம்சங்கள் யாவை?
6. வீட்டில் உள்ள தாழ்வாரத்தின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக.
7. நிறப்பொருத்தம் குறித்து நீ அறிந்து கொண்டது யாது?
8. கீழ் வரும் நிறப்பொருத்தங்களை விளக்குக.
   அ) தனி நிறப்பொருத்தம்
   ஆ) அருகாமை நிறப்பொருத்தம்
   இ) எதிர் நிறப்பொருத்தம்
   ஈ) பிரித்த எதிர் நிறப் பொருத்தம்
   உ) மூவர்ண நிறப்பொருத்தம்
   ஊ) இரட்டை எதிர் நிறப்பொருத்தம்
   எ) நான்கு வண்ண நிறப்பொருத்தம்
9. நிறங்களின் பரிமாணம் சிறு குறிப்பு வரைக
10. நீலம் மற்றும் பச்சை நிறங்கள் பின்னடைவு நிறங்களாகும். காரணம் யாது?
11. முன்னோக்கிய நிறங்களாக கருதப்படுவது எவை இந்நிறங்கள் எவ்விடத்தில் பயன்படுத்தப்படுகிறது.
12. வடிவத்தின் கொள்கையான அழுத்திக்காட்டலின் முக்கியத்துவத்தை கூறுக.
13. கிரேக்க / தங்க செவ்வகம் என்றால் என்ன?
14. வடிவமைப்பில் விகிதத்தின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக.
15. உள் அலங்காரத்தில் அழுத்திக்காட்டலை எவ்விதம் பயன்படுத்தலாம்.
16. மலர் அலங்காரத்தின் வகைகள் யாது
17. மலர் அலங்காரத்தின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?
18. தரை அலங்காரத்தின் பல்வேறு வகைகள் யாவை?

**V பெரு வினா 5 மதிப்பெண்கள்**

1. வீட்டின் முக்கியத்துவத்தை விளக்குக.
2. பல்வேறு வகையான குடியிருப்பு கட்டிடங்களை பற்றி எழுதுக.
3. வீட்டை தேர்வு செய்வதை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
4. சொந்த வீட்டிற்கும் வாடகை வீட்டிற்கும் உள்ள நன்மைகளை பட்டியலிடுக.
5. சமையலறையை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பதை விவரி.
6. படுக்கையறையை அமைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய குறிப்புகளை விளக்குக.
7. வீடுகட்ட இடம் தேர்வு செய்யும்போது நினைவில் கொள்ள வேண்டிய காரணிகளை விளக்குக.
8. வீடு கட்டத் திட்டமிடும் போது அறைகளை ஒழுங்குபடுத்துவதில் உள்ள கொள்கைகளை விவரி.



XII Std - Home Science TM_Unit 5.indd 178 20-04-2020 2.15.08 PM

9. கலையின் மூலப்பொருட்களை பட்டியலிடுக.
10. வடிவத்தில் பல்வேறு கொள்கைகளை தகுந்த உதாரணத்துடன் விரிவாக கூறுக.
11. நெடுக்கு கோடு மற்றும் இடைமட்டக் கோடுகள் வீட்டின் உள் அலங்காரத்தில் எவ்வகை விளைவை ஏற்படுத்தும்.
12. பவித்ரா குள்ளமாகவும் மற்றும் குண்டாகவும் இருக்கிறாள். அவள் எவ்வகையான கோடுகள் கொண்ட உடையயை தேர்வுசெய்து அணிந்தால் உயரத்தை சரிசெய்து காட்ட முடியும் விளக்குக.
13. பல்வேறு வகையான நிறப்பொருத்தம் பற்றி விரிவாக கூறுக.
14. குறுக்கு கோடு மற்றும் வளைந்த கோடுகள் எதை குறிக்கிறது.
15. பல்வேறு வகையான உருவங்கள் மற்றும் வடிவங்கள் பற்றி விளக்குக.
16. சீரான மற்றும் சீரற்ற சமநிலையை வேறுபடுத்தி காட்டுக.
17. ஷீலாவின் வீட்டில், அடர்த்தியான நிறமுள்ள சுவர் கொண்ட அறை உள்ளது. அந்த அறையை நாம் எவ்வாறு பெரிது படுத்திக் காட்டுவது.
18. பல்வேறு வகையான நிறப்பொருத்தங்கள் யாவை? உதாரனம் தருக.
19. மூக்கோண நிறப்பொருத்தம் மற்றும் நான்கு வண்ண நிறப்பொருத்ததை வேறுபடுத்தி காட்டுக.

## மேற்கோள் நூல்கள்

### Books


1. Premavathy Seetharaman, Sonia Batra, Preethi Mehra, (2015), An Introduction to Family Resource Management, CBS Publishers and Distributors (P) Limited, New Delhi.
2. Varghese M.A, Ogale M.N, Srinivasan K, (1985), Home Management, New Age International (P) Limited, Publishers, New Delhi.
3. Premavathy Seetharaman and Parveen Pannu (2009), Interior Design and Decoration, CBS Publishers and Distributors (P) Limited, New Delhi.
4. Narayana Tanthry, (2002), Practical House Building Manual, Tantry Associates, Bangalore.
5. Pratap Rao M, (1998)Interior Design Principles and Practice, Standard Publishers Distributors, Delhi.